விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 23 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 08 வியாழக்கிழமை (23.12.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 004


கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## இலங்கையில் மேலும் 3 ஒமிக்ரோன் தொற்றாளர்கள் அடையாளம்

*(கொழும்பு)*

**இலங்கையில் ஒமிக்ரோன் கோவிட் திரிபுடன் மேலும் 3 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவு அறிவித்துள்ளது.**

சூடானில் இருந்து வந்த இருவரும் தன்சானியாவில் இருந்து வந்த ஒருவருமே இவ்வாறு ஒமிக்ரொன் கோவிட் திரிபுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் ஒமிக்ரோன் கோவிட் திரிபுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 7ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் ஏற்கெனவே. 15

## வடக்கின் அபிவிருத்தி திட்டங்களினூடாக மகிந்த அரசு பாரிய கொள்ளை

### சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடக்கில் முக்கிய அபிவிருத்தி திட்டங்களினூடாக 400% கொள்ளையடித்தது மகிந்த அரசாங்கம் என பாட்டலி சம்பிக்க ரணவக்க குற்றம்சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த 2010இல் தமிழ் மக்களுடன் ஒரு கூட்டம் இடம்பெற்றது. 15

## வவுனியா பேருந்து நிலையத்தில் முதியவர் ஒருவர் சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியா பழைய பேருந்து நிலையத் 15

## வடக்கு - தமிழக மீனவர்களுடன் பேச்சு

### இந்திய மத்திய அரசு நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு மற்றும் தமிழக மீனவர்களுக்கு இடையிலான பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவர, இருதரப்பு மீனவர் சங்கங்களுடன் இந்திய மத்திய அரசு பேச்சுவார்த்தை நடத்தவுள்ள 15

## தமிழ்க் கட்சிகளால் அனுப்பப்படவுள்ள பாரத பிரதமருக்கான கடிதத்தின் பொருள் மாற்றம்



### சுமந்திரன் எம்.பி விசேட அறிக்கை

*(கொழும்பு)* இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் முன்வைப்பதற்காகத் தமிழ்க் கட்சிகள் தமது கோரிக்கையாகத் தயார் செய்த கடிதத்தின் தலைப்பு "13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தக் கோருதல்" என இருந்த நிலையில் தற்போது "தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதும் இலங்கை - இந்திய ஒப்பந்தமும்" என மாற்றப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். *(15ஆம் பக்கம் பார்க்க)*

## கொரோனா 16 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில்மேலும்16 பேர்கொரோனாவால் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14,811 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## மூச்சுத் திணறலால் இணுவிலில் 3 மாத குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

மூச்சுத் திணறல் 15

## எரிபொருள் விலை அதிகரித்துள்ளதால் பஸ் கட்டணம் 20 வீதத்தால் அதிகரிக்க நேரிடலாம்



(கொழும்பு)

எரிபொருள் விலை அதிகரித்துள்ளதால் பஸ் கட்டணமும் 20 சதவீதத்தால் அதிகரிக்க நேரிடலாம் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

பஸ் கட்டண திருத்தம் 15

## அரசின் நத்தார் பரிசே எரிபொருள் விலையேற்றம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

அரசாங்கம் அதன் நத்தார் பரிசாக ஏற்கெனவே நாட்டுமக்கள் முகங்கொடுத்திருக்கும் நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தக்கூடிய வகையில் எரிபொருள் விலைகளை அதிகரித்திருக்கின்றது.

உலகசந்தையில் எரிபொருள் விலைகள் 15

## பருத்தித்துறையில் விபத்துக்குள்ளான முதியவர் உயிரிழப்பு

(கரணவாய்)

பருத்தித்துறை வியாபாரி மூலையில் இடம்பெற்ற விபத்தில் படுகாய 15

## யாழ்.வல்லைவெளியை அழகுபடுத்தும் செயற்பாடு நேற்று முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

"செழுமையான நாட்டை கட்டியெழுப்பும்நோக்கு" எனும்தொனிப் பொருளுக்கமைய பசுமை உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் மூலம் யாழ்ப்பாணம் - வல்லைவெளி அழகுபடுத்தும் செயற்றிட்டம், 15

## 'நத்தார்' கொத்தணி உருவாகும் அபாயம்

### சுகாதாரத் தரப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் கோவிட் கொத்தணி உருவாகும் என எச்சரித்திருந்த தொற்று நோயியல் நிபுணர் ஹசித அத்தநாயக்க "நத்தார் கொத்தணி உருவாகாமல் இருப்பது மக்களின் கைகளி 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்



உயர்திரு.
தேவராசா வைகுந்தன்
(தென்னை பயிர்ச் செய்கை
பிராந்திய முகாமையாளர்)

அனர்த்த காலங்களில் மக்களுடைய துயர் துடைக்கின்ற மக்களோடு மக்களாக இணைந்து மக்களுக்கான வாழ்வாதாரங்களை உயர்த்துகின்ற மக்கள் சேவையாளனை நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

(9194)

வடமராட்சி ஆன்மீக அறக்கட்டளை
பருத்தித்துறை



## பிறந்தநாள் வாழ்த்துக்கள்



49ஆவது அகவையில்
காலடி எடுத்துவைக்கும்

திருவாளர்
தேவராசா
வைகுந்தன்
(தென்னை பயிர்ச்செய்கை –
பிராந்திய முகாமையாளர்)

அவர்கள் தென்னை வளர்ப்பிலும் மக்களுக்கு செயலூக்கம் வழங்கியதோடு மக்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்கி வழங்கியும் மக்கள் மனதில் என்றும் நிலைத்து இருக்கும் சமூக சேவையாளராக அவர் ஆற்றிய பணிகள் அளப்பரியது.
அவர் பணி தொடர இந்நாளில் வாழ்த்துகின்றோம்.

சங்குவேலி கற்பகதரு சங்கம்
J/187, சங்குவேலி வடக்கு, மானிப்பாய்.

(9193)


# பொருட்களின் விலைகள் மேலும் உயர்வடையும்

## அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ

(கொழும்பு)

பொருட்களின் விலைகள் மேலும் அதிகரிக்கும். கடினமான விடயமாக இருந்தாலும் அதனை செய்தாகவேண்டிய நிலைமையே உள்ளது என்று அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ நேற்று தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"கொரோனா பெருந்தொற்று நிலைமை முழுமையாக கட்டுக்குள்வரும்வரை, இந்நிலைமைக்கு நாம் முகங்கொடுத்தாக வேண்டும். உணவுப் பொருட்களின் விலைகள் மற்றும் எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படுவதை நாமும் விரும்பவில்லை. அனைவருக்கும் இதனால் பாதிப்பு. விருப்பம் இல்லாவிட்டால்கூட அதிகரிப்பை செய்தாக வேண்டிய நிலைமையே காணப்படுகின்றது." என்றார். (ம)


## செல்வச்சந்நிதி ஆலய அறநெறிப் பாடசாலை தொடர்பான அறிவித்தல்

மேற்படி செல்வச்சந்நிதி ஆலய அறநெறிப் பாடசாலைக்கு தலைமை ஆசிரியரும் உதவி ஆசிரியர்களும் தேவைப்படுகின்றனர்.

சேவை நோக்கோடு கடமையாற்ற விரும்புகின்ற ஓய்வுபெற்ற இந்து சமயம் கற்பித்த பாடசாலை ஆசிரியர்கள் அல்லது அறநெறி Diploma முடித்தவர்கள் தலைமை ஆசிரியர் சேவைக்கும் அறநெறி மாணவர்களுக்கான சங்கீதம், மிருதங்கம், நடனம், யோகாசனம் போன்ற பாடங்களுக்கான கற்பித்தல் பயிற்சி வழங்கலுக்கான உதவி ஆசிரியர்களும் தேவைப்படுகின்றனர்.

தொண்டைமானாறு மற்றும் அண்மித்த அயல் ஊர்களைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது. ஊக்குவிப்புத் தொகை (பிரயாணச் செலவு) வழங்கப்படும்.

தங்களது சுயவிபரக் கோவையினை 20.01.2022 ஆம் திகதிக்கு முன்னர் செல்வச்சந்நிதி ஆலய திருப்பணிக் காரியாலயத்தில் ஒப்படைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். 2022ஆம் ஆண்டினை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆண்டாக பிரகடனப்படுத்திய அரசாங்கத்திற்கு நன்றிகளைத் தெரிவிப்பதோடு எமது அறநெறிப் பாடசாலைச் செயற்பாடுகளை முன்னோக்கி கொண்டு செல்ல பெற்றோர்கள் உங்கள் பிள்ளைகளை விருப்பத்துடன் அறநெறிப் பாடசாலையில் இணைத்து பயனடைந்து கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

*"இளமையில் கல்வி சிலையில் எழுத்து"*
*"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்."*

(9189) ஆலய நிர்வாகம்


# எஸ்.ரி.ஆர் காலமானார்



(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் பொருளாளரும் கட்சியின் பிரமுகரும் எஸ். ரி. ஆர். என அழைக்கப்படும், சின்னத்தம்பி தியாகராஜா (வயது-91) நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

யாழ்ப்பாணம் ராஜா, வவுனியா வசந்தி மற்றும் அமுதா, திருகோணமலை சரஸ்வதி, மட்டக்களப்பு சுகந்தி மற்றும் சாந்தி ஆகிய திரையரங்குகளின் உரிமையாளரும் பிரபல தொழிலதிபருமாவார்.

அத்துடன் தமிழக முன்னாள் முதலமைச்சரும் நடிகருமான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகருமாவார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம -33)


## மரண அறிவித்தல்



பிறப்பு 29 – 03 – 1940

இறப்பு 21 – 12 – 2021

### பிள்ளையாகுட்டி குருகுலசிங்கம்

யாழ். மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் தணிகை இல. 335/27, மன்னார் வீதி, வேப்பங்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பிள்ளையாகுட்டி குருகுலசிங்கம் நேற்று முன்தினம் (21.12.2021) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் பிள்ளையாகுட்டி - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் கணபதிப்பிள்ளை - குஞ்சரம் தம்பதியரின் அன்பு மருமகனும் மலர் அவர்களின் அன்புக் கணவரும் சுமதி (M.A - வலயக்கல்விப் பணிமனை, வவுனியா தெற்கு), சுரேந்திரன் (கனடா), சுசீந்திரன் (பிரபா - கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரவிச்சந்திரன் (அதிபர் - பூவரசு ஆ. பாடசாலை, பூவரசங்குளம்), பிரமிளா (கனடா), ராதிகா (கன்டா) ஆகியோரின் அன்பு மாமனாரும் அபினேஷ், கிதுர்ஷன், அபிரா, மகிஷா, அபிஷா, சபிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (24.12.2021) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வேப்பங்குளம் (தச்சனாங்குளம்) இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 2.00 மணியளவில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-3330)

மன்னார் வீதி,
வேப்பங்குளம், வவுனியா.
077 758 4402
077 853 2445
024 222 3204



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 01 05 1958

உதிர்வு 23 11 2021

கடந்த 23.11.2021 ஆம் திகதி சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் மார்க்கண்டு சண்முகலிங்கம் (மூர்த்தி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (23.12.2021) வியாழக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரை இழந்து தவித்த வேளையில் தமது இரங்கல்களைத் தெரிவித்தோருக்கும் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டு பல்வேறு வழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(9174)

அண்ணாசிலையடி,
ஆலாவோடை, கரவெட்டி.
077 127 2429
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களை விடுவிக்கக்கோரி

# தமிழகத்தில் உண்ணாவிரதப் போராட்டம்

(இராமநாதபுரம்)

**இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டு இலங்கை சிறையில் உள்ள 68 மீனவர்களை விடுதலை செய்யக்கோரி இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் தங்கச்சிமடத்தில் நேற்று ஒரு நாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**



கடந்த சனி,ஞாயிறு மற்றும் திங்கள் ஆகிய மூன்று நாட்களிலும் புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற 68 மீனவர்களையும் அவர்களது 10 விசைப் படகுகளையும் இலங்கை கடற்படை எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கைது செய்து யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா சிறையில் அடைத்துள்ளனர்.

இதற்கு கண்டனம் தெரிவித்த இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட மீனவர்கள் இலங்கை சிறையில் உள்ள மீனவர்களை உடனடியாக படகுடன் விடுதலை செய்யக்கோரி நேற்று அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் எதிர்வரும் 31 ஆம் திகதி மீனவர்களை மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ள நிலையில் மீனவர்களை விடுதலை செய்யாத பட்சத்தில் எதிர்வரும் 1ஆம் திகதி தங்கச்சிமடத்தில் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபடுவதாக முடிவு செய்துள்ளனர்.



உண்ணாவிரதப் போராட்டத்தில் சிறையில் உள்ள மீனவர்களின் குடும்பத்தினரும் கலந்து கொண்டனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்தில் இலங்கை மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எல்லை தாண்டும் தமிழக மீனவர்கள் மீது நடவடிக்கை தொடரும் எனவும், அதே நேரத்தில் சிறைபிடிக்கப்பட்ட படகுகளை அரசுடைமையாக்கப்படும் என தெரிவித்தார்.

இதற்கு கண்டனம் தெரிவித்துள்ள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மீனவர்கள், எல்லை தாண்டி வரும் மீனவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் இலங்கை அரசை கண்டிக்கிறோம் என தெரிவித்தனர். (நி-5-33)

## துப்பாக்கி இல்லாது ஜனநாயகத்தை நிலைநாட்டிய பல்கலை.மாணவர்கள்

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

துப்பாக்கிகள் இல்லாது, குண்டுகள் இல்லாது தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தாமல் கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் தங்களது ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டியுள்ளனர் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

மேலும் தமது சுதந்திரத்திற்காக அடுத்தவர்களின் சுதந்திரத்தை பாதிக்காத வகையில் மாணவர்கள் நடந்து கொண்டனர் எனவும் பாராட்டியுள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா, பல்கலை வேந்தர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தலைமையில் அண்மையில் இடம்பெற்ற போது சில மாணவர்கள் தேரரின் கைகளில் இருந்து பட்டத்தை பெற மறுப்புத் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கம் அல்லது நாட்டின் தலைவர் மக்களின் விருப்பத்திற்கு மாறான தீர்மானங்களை எடுக்கும் போது, அது குறித்து கேள்வியெழுப்ப மக்களுக்கு உரிமை இருக்கிறது. அந்த வகையில் மாணவர்கள் இலங்கையில் ஜனநாயகத்தை உச்ச நிலைக்கு கொண்டு வந்துள்ளனர்.

அவர்கள் தமது எதிர்ப்பை அமைதியாகவும் பலமாகவும் வெளிக்காட்டினர். இதனையே நாங்கள் ஜனநாயகம் என்கிறோம்.

நாட்டின் முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் அந்த மாணவர்களுக்கு கௌரவத்தை வழங்குவதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

## இரு அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்கள்

(கொழும்பு)

இரண்டு அமைச்சுகளுக்கு புதிய செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வெகுஜன ஊடகத்துறை அமைச்சின் செயலாளராக அனுஷ பெல்பிட்டவும் விவசாய அமைச்சின் செயலாளராக டி.எம்.எல். டி.பண்டாரநாயக்கவும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் இந்த நியமனம் அமுலுக்கு வரும் என [illegible] யின் பேச்சாளர் கி[illegible] நாயக்க குறிப்பிட்டுள்ளார். (நி-5)

## நான் ஆட்சி பீடமேறினால் பட்டினிக்கு முற்றுப்புள்ளி

### சஜித் தெரிவிப்பு

(கொழும்பு)

"நான் ஆட்சி பீடமேறினால் நாட்டு மக்கள் பசியில் வாடுவதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டேன். அவர்களை வர்த்தக நிலையங்களில் நீண்ட நேரம் வரிசைகளில் காத்திருக்கச் செய்யமாட்டேன்"

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியால் முன்னெடுக்கப்பட்டுவரும் மருத்துவமனைகளுக்கு அவசியமான மருத்துவ உபகரணங்களை வழங்கி வைக்கும் செயற்றிட்டத்தின் கீழ் லுனாவ மருத்துவமனைக்கு நேற்று முன்தினம் உபகரணங்களை வழங்கி வைத்த சஜித் பிரேமதாஸ, அதனைத் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாடும் மக்களும் முகங்கொடுத்திருக்கக்கூடிய பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கின்ற பொறுப்பு ஆட்சிப்பீடத்திலுள்ள அரசின் வசம் காணப்படுவதுடன் அதற்கேற்றவாறுதான் கடந்தகால அரசுகளும் செயற்பட்டு வந்திருக்கின்றன.

எதிர்த்தரப்பினரான எம்மைப் பொறுத்தமட்டில், அதிகாரம் எமது வசமில்லாத போதிலும் கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடி ஏற்பட்ட நாளிலிருந்து தற்போது வரை அதனைக் கையாள்வதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் அவசியமான உதவிகளை இயலுமான வரையில் வழங்கி வருகின்றோம்.

நாடு சுதந்திரமடைந்ததிலிருந்து நடைமுறையிலுள்ள கட்டமைப்பை மாற்றியமைக்க வேண்டும் என்று பலரும் தொடர்ச்சியாகக் கூறி வருகின்றார்கள். ஆனால், நாம் எதிர்க்கட்சியாக இருக்கின்ற போதிலும் இதுவரையில் நடைமுறையிலிருந்த கலாசாரத்தை முழுமையாக மாற்றி, சிறந்த முன்னுதாரணமான எதிரணியாக செயற்பட்டுள்ளோம்.

நான் ஆட்சி பீடமேறினால் நாட்டு மக்கள் பசியில் வாடுவதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டேன். அவர்களை வர்த்தக நிலையங்களில் நீண்ட நேரம் வரிசைகளில் காத்திருக்கச் செய்யமாட்டேன். எனது ஆட்சியில் பால்மாவைக் கொள்வனவு செய்வதற்காகத் தாய்மார் சதொச விற்பனை நிலையங்களுக்கு அலைய வேண்டிய தேவையேற்படாது.

அரசு அதன் நத்தார் பரிசாக ஏற்கனவே நாட்டு மக்கள் முகங்கொடுத்திருக்கும் நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தக்கூடிய வகையில் எரிபொருள் விலைகளை அதிகரித்திருக்கிறது. உலக சந்தையில் எரிபொருள் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ள போதிலும், தற்போதைய அரசின் செயற்றிறனற்ற பொருளாதார நிர்வாகத்தின் விளைவாக எமது நாட்டில் எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் மக்கள் மீது அதிக சுமையைச் சுமத்தி, தமது இயலாமையை மறைத்துக்கொள்வதற்கு அரசு முயற்சிக்கக்கூடாது எனத் தெரிவித்தார். (நி-5)

## எரிவாயு நெருக்கடியால் 3 ஆயிரத்து 500 பேக்கரிகள் மூடல்

(கொழும்பு)

நாடு முழுவதுமுள்ள 7 [illegible] ஆயிரத்து 500 பேக்கரிகள் மூடப்பட்டுள்ளன.

எரிவாயு நெருக்கடி காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என். கே.ஜெயவர்தன தெரிவித்தார்.

இந்த பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படாவிட்டால் ஏனைய பேக்கரிகளும் மூடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நத்தார் கொத்...

லேயே தங்கியுள்ளதாக" குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றாவிடின் நத்தார் கொத்தணி உருவாவதை தடுக்க முடியாது என எச்சரித்துள்ளார்.

"நத்தாரை கொண்டாடுவதில் மக்கள் ஆர்வமாக இருக்கின்றனர். எனினும் கடந்த புத்தாண்டுக் கொத்தணி போன்ற அசம்பாவித சம்பவங்கள் இடம்பெறாமல் இருக்க சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்ற வேண்டும். முன்பு போலவே சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் ஏப்ரலில் புத்தாண்டுக் கொத்தணி வரலாம் என எச்சரித்தேன். நான்சொன்னது போலவே நடந்தது. எனவே இந்த நத்தாரிலும் எங்கு செல்கிறோம் என்பதில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் எனக் கூறியுள்ளார். (ம)





49 ஆம் அகவையில் கால் பதித்து நிற்கும் எங்களின் கிளிநொச்சி மாவட்ட தென்னைப் பயிர்ச்செய்கை பிராந்திய முகாமையாளர்

**உயர்திரு. தேவராசா வைகுந்தன்**

அவர்கள் சீரும் சிறப்புடன் வாழ்ந்து நற்பணிகள் ஆற்ற மனமார வாழ்த்துகின்றோம்.

(C-3333)

**புலோப்பளை கிழக்கு கற்பகதரு சங்கம்**
**பளை, கிளிநொச்சி மாவட்டம்.**

## பாராட்டி வாழ்த்துகிறோம்



நல்லையம்புலம்
கட்டைவேலி
கரவெட்டியைச் சேர்ந்த

**வல்லிபுரம் கணபதிப்பிள்ளை (JP)**

(ஓய்வுநிலை அதிபர் – யா/ திருஇருதயக் கல்லூரி)

அகில இலங்கை சமாதான நீதவானாக 21.12.2021 செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட நீதிமன்ற நீதியரசர் திரு. S. **சதீஸ்தரன்** அவர்கள் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துள்ளார். இவர் நல்லை அம்பாள் சனசமூக நிலையத்தின் தலைவராகவும் நல்லையம்புலம் வீரபத்திரகாளி அம்மன் பரிபாலன சபையின் முன்னாள் பொருளாளராகவும் கட்டைவேலி கிராமசேவகர் பிரிவு சிவில் பாதுகாப்புக் குழுத் தலைவராகவும் நெல்லியடி கட்டைவேலி, ப.நோ.கூட்டுறவுச் சங்க நெறியாளர் குழு உபதலைவராகவும் கடமையாற்றி வருவதோடு அக்கிராமத்தில் சிறந்த சமூகத் தொண்டுகளிலும் ஈடுபட்டுவருகின்றார்.

(C-3334)

**- நண்பர்கள்**

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 – 10 – 1972



மறைவு 22 – 12 – 2021

**Lion திரு. மருதலிங்கம் சுஜீவன் MAF, J.P**

( யாழ். நுழைவாயில், Lions கழக ஸ்தாபக உறுப்பினரும் முன்னாள் தலைவரும் ஆளுநர் சபை உறுப்பினர், வலம்புரி பிரதேச செய்தியாளர், தற்போதைய J/73 யாழ். நகர் மேற்கு சிவில் பாதுகாப்புக் குழுத் தலைவர், உரிமையாளர் – மருதம்ஸ் கடை )

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கை வதிவிடமாகவும் தற்போது இல. 140/9, நான்காம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட Lion திரு. மருதலிங்கம் சுஜீவன் MAF, J.P அவர்கள் நேற்று (22.12.2021) புதன்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மருதலிங்கம் – இராசலட்சுமி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற பாலசிங்கம் – அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் அனுதினி அவர்களின் அன்புக் கணவரும் அபிநயா, துக்சிகா, தனுஷ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுஜாதாவின் அன்புச் சகோதரனும் பாலினி, சுலோசனா, சதீஸ்குமார், சிவகுமார், ராகினி, ஐந்துயா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (24.12.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இறுதிக் கிரியைகள் இடம்பெற்று கோம்பையன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 140/9, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
077 938 0984
077 679 5715
(C-3336)
**குடும்பத்தினர்**

## 49ஆவது பிறந்ததினம்



**தேவராசா வைகுந்தன்**

(யாழ். பிராந்திய முகாமையாளர் – தென்னைப் பயிர்ச்செய்கை சபை)

அவர்களின் அர்ப்பணிப்பான சேவை மக்களோடு தொடர வாழ்த்துகிறோம்.

வாழ்த்துபவர்கள்:
**வடமராட்சி தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்**

(C-3332)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
**உயர்திரு தம்பித்துரை சஞ்சீவ்ராஜ் (குட்டி)**



காலன் வந்து காரியம் முடித்தானென்று
காதோரம் வந்தவொரு செய்தி
காலத்தின் கோலத்தை எண்ணி
கலங்கி நிற்கின்றோம்.
கலைத்தாயின் மகனாம் குட்டியை
இழந்து
மஞ்சவனப்பதியான் சரணடைந்தீரோ!

(C-3335)

தம் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
**குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

23.12.2021
மார்கழி 08, வியாழக்கிழமை
சதுர்த்தி பிற்பகல் 4.24 மணிவரை
ஆயிலியம் பின்னிரவு 12.57 மணிவரை
சுபநேரம் 7.55-7.25 மணிவரை
இராகு காலம் -1.55-3.25 மணிவரை
சந்திராஷ்டமம்- பூராடம், உத்தராடம்
சித்தாமிர்தம்

வளவன்


மேஷம்

தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், அழகுசாதனப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், பயணங்களால் பலனுண்டு.


ரிஷபம்

சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், வழிபாட்டால் சிறப்பினைக் காணும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.


மிதுனம்

கடினமான வேலைகளைக்கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.


கடகம்

நண்பர்களின் ஆதரவு கிடைக்கும் வாய்ப்புண்டு, கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு, விருப்பங்கள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள்.


சிம்மம்

குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, விருந்தினர் வருகையால் சுப செலவுகள் ஏற்படலாம், வேலைச் சுமை அதிகரிக்கும் நாள், பயணங்களில் விழிப்புணர்வு அவசியம்.


கன்னி

பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.


துலாம்

செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், சொன்ன சொல்லை காப்பாற்றி மகிழ்வீர்கள், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.


விருச்சிகம்

வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.


தனுசு

எதையும் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.


மகரம்

அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.


கும்பம்

உறவினர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும், கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.


மீனம்

வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

அன்பு இருக்கும் இடம் சொர்க்கம்,
அன்பு மறையும் இடம் நகரம்

# முதுகெலும்பு இருந்தால் அரசிலிருந்து வெளியேறுங்கள்

## ஐக்கிய மக்கள் சக்தி சவால்

(கொழும்பு)

"அமைச்சர்களான விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார மற்றும் உதய கம்மன்பில ஆகியோருக்கு முதுகெலும்பிருக்கும் பட்சத்தில் அவர்கள் உடனடியாக அரசிலிருந்து வெளியேற வேண்டும்" என சவால் விடுத்துள்ளது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி.

"அரசுக்குள் இருந்து கொண்டு, அரசைப் பாதுகாக்கும் விதத்திலான அரசியலையே மேற்படி தரப்புகள் முன்னெடுத்து வருகின்றன. ஆனால், தாங்கள் எதிர்ப்பாளர்கள் என்ற விம்பத்தை மக்கள் மத்தியில் உருவாக்குவதற்கு அந்தத் தரப்புகள் முற்படுகின்றன.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்க இடமளிக்கமாட்டோம் என்று விமல், வாசு, கம்மன்பில உள்ளிட்டவர்கள் சூளுரைத்தனர். ஆனால், மேற்கு முனையம் வழங்கப்படும் போது மௌனம் காத்தனர்.

ஆரம்பத்தில் போர்ட் சிற்றி சட்டமூலத்துக்குப் போர்க்கொடி தூக்கினர். இறுதியில் இரு கைகளையும் உயர்த்தி ஆதரவு நல்கினர். அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டம் முன்வைக்கப்படும்போது, அமெரிக்கப் பிரஜை பாராளுமன்றம் வர இடமளியோம் என்று மார்தட்டினர். எதிர்ப்பை வெளியிட்டனர். ஆனால், பசில் பாராளுமன்றம் வந்தார். நிதி அமைச்சரானார். 20 இற்கு எதிர்ப்பை வெளியிட்டவர்களே அதனை ஆதரித்தனர். யுகதனவி ஒப்பந்தத்துக்கு எதிர்ப்பு. ஆனால், அரசின் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தை நிரூபிப்பதற்கு பாதீட்டை ஆதரித்து வாக்களிக்கின்றனர். இவர்கள் அரசியல் நாடகம்செய்வது தெளிவு. எனவே, முதுகெலும்பிருந்தால் அரசியிலிருந்து வெளியேறுமாறு சவால் விடுக்கின்றோம்" என பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்த தெரிவித்தார். (நி-5)

## இலங்கையின் பண வீக்கம் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையின் பண வீக்கம், இந்த ஆண்டு ஒக்டோபரில் 8.3 சதவீதத்திலிருந்து நவம்பரில் 11.1 சதவீதத்திற்கு அதிகரித்தது என புள்ளிவிபரவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஆண்டுச் சராசரி அடிப்படையில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 2021 ஒக்டோபரில் 5.7 சதவீதத்திலிருந்து 2021 நவம்பரில் 6.2 சதவீதத்திற்கு அதிகரித்தது.

உணவு மற்றும் உணவல்லா பொருட்களின் மாதாந்த விலை அதிகரிப்புக்களால் பண வீக்கம் தூண்டப்பட்டிருந்தது என அத்திணைக்களம் தெரிவித்தது. (நி-5)

## ரயிலில் மோதுண்டு இளம் யுவதி மரணம்

(கொழும்பு)

கொழும்பில் ரயிலில் மோதுண்டு இளம் யுவதி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார் என பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாளிகாதென்ன, வெயாங்கொட பிரதேசத்தை சேர்ந்த 19 வயது யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் மாதம்பை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (நி-5)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர். சின்னையா பெருமாள்



பிறப்பு 09.10.1940 — இறப்பு 21.12.2021

தருமபுரம் மத்திய கல்லூரி அதிபர் திருமதி. க. இந்திராகாந்தி அவர்களின் தந்தையார் சி. பெருமாள் அவர்கள் இறைபதம் அடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதோடு அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
அதிபர்கள் சங்கம்,
கிளிநொச்சி மாவட்டம்.

(C-3331)

# மரண அறிவித்தல்

## திருமதி. இலட்சுமி இளையதம்பி



கிளிநொச்சி செல்லவாரிபிட்டி கண்டாவளையைப் பிறப்பிடமாகவும், லண்டன் Mitcham ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இலட்சுமி இளையதம்பி அவர்கள் 19.12.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, சின்னம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற செல்லர், சின்னாச்சி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற செல்லர் இளையதம்பி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் இந்திராணி (இலங்கை), செல்வத்துரை (லண்டன்), செல்வர்ராஜா (இலங்கை), சிவராஜா (லண்டன்), காலஞ்சென்ற மனோரஞ்சிதன் மற்றும் மனோராணி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான பூரணம், சுப்பிரமணியம், சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

செல்லம்மா, முருகேசு, மேனகா, தனயோகம், சாந்தினி, உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், குலசிங்கம், தயாபரன், பிரதீபன், சுதர்சி, ஷன்யா, லக்ஷினி, தரணி, தனோஷன், மிதுஷன், பிருத்தி, பங்கயற்செல்வி, அனுஜா, பரமேஸ்வரன், சிவநேசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும்,

இந்துசா, ரினுசா, சாருஷன், தாருகா, தனோயா, ரிலோச்சன், அஸ்வின், ஆகாஸ், அக்ஷயா ஆகியோரின் பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23.12.2021 இன்று லண்டனில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

முருகன் கோவிலடி
4ம் வாய்க்கால்,
கண்டாவளை.

தகவல்: குடும்பத்தினர்
செல்வராசா (மகன்)
077 677 9736.

(9196)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு பிரதேச செயலகங்களாக பிரியும் தென்மராட்சி பிரதேச செயலகம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான தென்மராட்சி பிரதேச செயலகத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கை எதிர்வரும் 2023 அல்லது 2024 ஆம் ஆண்டளவில் நடைமுறைப்படுத்தப்படும் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

தென்மராட்சி பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பிரதேச மட்ட அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்

தென்மராட்சி பிரதேச செயலகத்தை இரண்டு பிரதேச செயலகமாகப் பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக தென்மராட்சி மக்களால் முன்வைக்கப்பட்டு வருகிறது.

பிரதேச செயலகத்தை இரண்டாகப் பிரிப்பது தொடர்பாக பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தற்போது இது தொடர்பாக அறிக்கை எல்லைப்படுத்தல் குழுவிடம் சென்றுள்ளது.

எல்லைப்படுத்தல் குழு அங்கீகாரம் வழங்கும் போது 2023 அல்லது 2024 ஆம் ஆண்டில் தென்மராட்சியில் இரண்டு பிரதேச செயலகங்கள் அமையப்பெறும் என தெரிவித்தார். (4-5-30)



யாழ்.இந்திய துணை தூதரகத்தினால் மயிலிட்டியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 43 இந்திய மீனவர்கள் மற்றும் மன்னாரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 12 இந்திய மீனவர்களுக்கு தேவையான உடைகள் உட்பட அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் முகக்கவசங்கள் என்பன நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. இந்தியாவில் உள்ள அவர்களது குடும்ப உறுப்பினர்களுடன் தொலைபேசி வாயிலாக உரையாடுவதற்கான ஏற்பாடுகளும் ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளன. (படம் :-கஜிந்தன்)

# தொழிற்பயிற்சி அதிகார சபையின் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையானது யாழ்ப்பாண மாவட்டத்தில் முழு நேர மற்றும் பகுதிநேர தொழிற் பயிற்சி கற்கைநெறிகளை 03.01.2022 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

இக் கற்கைநெறிகள் யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர், சுன்னாகம், பண்டத்தரிப்பு, வல்வெட்டித்துறை ஆகிய தொழிற் பயிற்சி நிலையங்களில் நடைபெறவுள்ளன.

கற்கை நெறிகளாவன, கணனி பிரயோக உதவியாளர், கணனி வன்பொருள் திருத்துநர், மரவேலை தொழில் நுட்பவியலாளர் (தளபாடம்), அழகுக்கலை வல்லுநர், காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), டீசல் இயந்திர திருத்துநர், தொழிற்சாலை மின்னிணைப்பாளர், முச்சக்கரவண்டி திருத்துநர், குளிர்சாதன உபகரணங்கள் மற்றும் வளி சீராக்கி திருத்துநர், வீட்டு மின்னிணைப்பாளர், அலுமினியம் பொருத்துநர், கட்டட நிர்மாண உதவியாளர், முன்பள்ளி ஆசிரியர், முதியோர் பராமரிப்பாளர், சிறுவர் பராமரிப்பாளர், நீர்க்குழாய் பொருத்துநர், வெதுப்பாளர், அறை பராமரிப்பாளர், வரவேற்பாளர், சமையலாளர், உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர் என்பனவாகும்.

இவ்வனைத்தும் முழுநேர கற்கைநெறிகளும் தேசிய தொழில் தகைமை (NVQ-3/4) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும்.

கற்கைநெறிகளை கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் நேரிலோ அல்லது தபாலிலோ எதிர்வரும் 31.12.2021 ஆம் திகதிக்கு முன்னர் உதவிப் பணிப்பாளர், மாவட்ட அலுவலகம், 4 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தொழிற் பயிற்சி அதிகார சபை உதவிப்பணிப்பாளர் கு.நிறஞ்சன் அறிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களுக்கு 021 222 7949 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4-5)

# பிரமணாக்கட்டு குள அபிவிருத்தி தொடர்பில் கள விஜயம்



(யாழ்ப்பாணம்)

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் முன்னெடுக்கப்படவுள்ள நல்லூர் பிரமணாக்கட்டு குளத்தை அழகுபடுத்தும் செயற்றிட்டத்தின் திட்ட வரைபுகள் தொடர்பான கள விஜயமொன்றை பாராளுமன்ற உறுப்பினரும் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அங்கஜன் இராமநாதன் நேற்று மேற்கொண்டார்.

இப்பணிகள் யாழ்ப்பாண மரபுகளையும் நல்லூர் ஆலய விழுமியங்களையும் உள்ளடக்கிய வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளிடம் அங்கஜன் இராமநாதன் வலியுறுத்தினார்.

மேலும் கிராமத்துடனான உரையாடல் செயற்றிட்டத்தினூடாகவும் இக்குளத்தின் புனரமைப்புக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இக்கள விஜயத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் மாகாண பணிப்பாளர், யாழ். மாநகர முதல்வர், ஆணையாளர், நல்லூர் பிரதேச செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர். (4-5-33)

## வருடாந்த விடுமுறை

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் நாளை 24 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் ஜனவரி 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை வருடாந்த விடுமுறைக்காக மூடப்பட்டிருக்கும் எனவும் விடுமுறை முடிவுற்று மறுநாள் 3 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஜெய்ப்பூர் நிறுவனத்தின் செயற்பாடுகள் வழமை போன்று இடம்பெறும் என நிறுவன தலைவர் மருத்துவ கலாநிதி திருமதி.ஜெ.கணேசமூர்த்தி அறிவித்துள்ளார். (4-5)

## ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலையின் ஒளிவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் சு.பிறேமன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக கோப்பாய் கோட்டக்கல்வி அலுவலகர் நா.சிவநேசன், சிறப்பு விருந்தினர்களாக குருநகர் உதவிப்பங்குத்தந்தை அருட்பணி ஜே.நிலான் யூலியஸ், யாழ்.கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி E.P. விக்ரோறியா, யாழ்.சிற்றி லயன்ஸ் கிளப் தலைவர் றொனி கஜன், கௌரவ விருந்தினர்களாக யாழ். கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி [illegible] ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (4-5)

# கொடுக்குளாயில் அமைக்கப்பட்ட பாலம் மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டது



(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு கொடுக்குளாய் அபாய வெளியேற்றப் பாதையில் அமைக்கப்பட்ட பாலம் மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கில் கடல் அனர்த்தங்களின் போது மக்கள் இருப்பிடங்களை விட்டு இலகுவாக வெளியேறுவதற்காக கொடுக்குளாய் கிராமத்திற்கு தெற்குப் புறமாக உள்ள ஆற்றினை மறித்து வீதி அமைக்கப்பட்டது.

அவ்வாறு அமைக்கும்போது 30 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த வீதி அமைக்கும் நோக்குடன் போடப்பட்ட பாலம் சிதைவடைந்து காணப்பட்டது. சிதைவடைந்த பாலத்தினை அகற்றி அவ்விடத்தில் புதிய பாலம் அமைத்து அப்பால வேலைகள் முடிவடைந்துள்ளன. இந்த நிலையிலேயே இப்பாலம் தற்போது மக்கள் பாவனைக்காக திறக்கப்பட்டுள்ளது. (4-5-64)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 380 | 360 | 350 |
| உருளைக்கிழங்கு | 180 | 150 | 160 | 180 |
| பச்சைமிளகாய் | 800 | 900 | 900 | 900 |
| தக்காளி | 400 | 380 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 50 |
| கோவா | 340 | 320 | 350 | 400 |
| கரட் | 300 | 480 | 450 | 600 |
| பூசணி | 60 | 70 | 70 | 100 |
| புடோல் | 300 | 300 | -- | 300 |
| வாழைக்காய் | 70 | 70 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 150-200 | 320 |
| பெரிய வெங்காயம் | 250 | 240 | 220 | 280 |
| பாகற்காய் | 600 | 600 | 450 | 800 |
| வெண்டிக்காய் | 280 | 200 | 200 | 240 |
| கருணைக் கிழங்கு | 100 | 110 | 110 | 140 |
| பயற்றங்காய் | 400 | 450 | 350 | 400 |
| லீக்ஸ் | 320 | 340 | 300 | 400 |
| பீற்றூட் | 280 | -- | -- | 400 |
| கறிமிளகாய் | 600 | 700 | 750 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 380 | 350 | 340 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 300 | -- | 320 |
| கீரை - 1 பிடி | 120 | 120 | 120 | 100 |
| தேசிக்காய் | 300 | 200 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 50-80 | 60-80 |
| இராசவள்ளி | 180 | 280 | 200 | 220 |
| வெங்காயப்பூ | 450 | 500 | -- | -- |
| முள்ளங்கி | 200 | 200 | -- | 300 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 30 | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | 60 | 100 | 80-100 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிகைக் காலத்தில் அதிகரிக்கும் போலித்தாள்களின் புழக்கம்

## பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

**பண்டிகைக் காலங்களில் போலி நாணயத் தாள்கள் புழக்கத்திலுள்ளதாகவும் மக்கள் மிக அவதானமாகச் செயற்படவேண்டும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.**

பொலிஸ் தலைமையகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிருலப்பனை, பாதுக்கை, களுத்துறை மற்றும் ரங்கல பிரதேசங்களில் கடந்த வாரத்தில் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது போலி நாணயத்தாள்கள் அச்சிடும் இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அப்பகுதிகளில் 5ஆயிரம் ரூபாய், ஆயிரம் ரூபாய் போலி நாணயத்தாள்கள் அச்சடிக்கப்பட்டுள்ளதாகவும் அதனை அச்சடிக்க பயன்படுத்திய கணனி மற்றும் ஏனைய உபகரணங்களை கைப்பற்றியுள்ளதுடன் சந்தேக நபர்கள் சிலரை கைது செய்துள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பண்டிகைக் காலங்களில் மக்கள் நகர்களுக்குச் சென்று பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது அவ்வாறு போலி நாணயத்தாள்கள் கைமாறுவதற்கு இடமுண்டு.

இக்காலங்களில் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்களும் அது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்துவது முக்கியமென்றும் பொலிஸ் தலைமையகம் கோரிக்கை விடுத்துள்ளது.

அவ்வாறு போலி நாணயத்தாள்களை அடையாளம் காண்பதற்கு அதில் பொறிக்கப்பட்டுள்ள விசேட அடையாளம் அச்சடிக்கப்பட்டுள்ள கடதாசியின் தன்மை, பாதுகாப்பு நூல், நாணயத்தாள்களின் வர்ணம் ஆகியவற்றை அவதானித்தால் போலி நாணயத்தாள்களுக்கு ஏமாறுவதைத் தவிர்க்க முடியும்.

அவ்வாறான நாணயத்தாள்கள் புழக்கத்தில் காணப்படும்போது அது தொடர்பில் 119 என்ற பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து தகவல்களை வழங்க முடியும் அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அது தொடர்பில் அறிவிக்க முடியுமென்றும் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. (நி-5)

# டெல்டா வைரஸை விட 70 மடங்கு வேகத்தில் ஒமிக்ரோன்

## மருத்துவ அதிகாரிகள் சங்கம்



(கொழும்பு)

கொரோனாத் தொற்றின் ஒமிக்ரோன் மாறுபாடு டெல்டாவை விட 70 மடங்கு வேகமாக பரவுவது உறுதி செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே அச்சங்கத்தின் தலைவர் மருத்துவர் பத்மா குணரத்ன இதனைத் தெரிவித்தார். ஒமிக்ரோன் மாறுபாட்டின் வீரியம் குறித்து அறியாமல் பண்டிகைக் காலத்திற்கு முன்னரே மக்கள் அதிகளவில் கூடுவதாக மருத்துவர் கவலை வெளியிட்டார். (நி-5)




பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருவாளர்
**தே. வைகுந்தன்**
(தென்னை பயிர்ச்செய்கை
பிராந்திய முகாமையாளர்)

49 ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் திருவாளர் **தே.வைகுந்தன்** அவர்களை சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

தென்னைப் பயிர்ச்செய்கைக்காக அவர் ஆற்றிய பணிகள் அளப்பரியது. அவர் பணி மேலும் தொடர இந்நாளில் வாழ்த்துகின்றோம்.

**யாழ் மாவட்ட கற்பகதரு சங்கங்கள்**

# சாவகச்சேரி நகராட்சி மன்றம் ஆதனப் பெயர் மாற்றம்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்கு உட்பட்ட வட்டாரம் 4, பெருங்குளம் மட்டுவில் வீதியில் 140/1 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தையுடைய ஆதனம் வினாசித்தம்பி நாகலிங்கம் எனும் பெயரில் ஆதனவரிப் பதிவேட்டில் காணப்படுகிறது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை நுணாவில் கிழக்கு வேலுப்பிள்ளை இராசையாவும் பெண் தெய்வானைப்பிள்ளையும் பிரசித்த நொத்தாரிசு இ.துரைசிங்கம் முகதாவில் 1951/11/12 ஆம் திகதியிடப்பட்ட 3331 ஆம் இலக்க அறுதிமூலம் ஆறுமுகம் கணபதிப்பிள்ளைக்கு அறுதியாக வழங்கப்பட்டுள்ளது.

பின்னர் 1963/07/10 ஆம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு இ.துரைசிங்கம் முகதாவில் 13132 ஆம் இலக்கத்தில் அறுதி மூலம் ஆறுமுகம் அல்லது பொன்னையா கந்தசாமிக்கு வந்தடைந்தது. 05/08/2016ஆம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு சி.பொன்னம்பலவாணர் முகதாவில் 7891 ஆம் இலக்கத்தின் நன்கொடை அறுதி மூலம் பொன்னம்பலம் பெண் இராஜேஸ்வரிக்கும் 10/02/2015ஆம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு செ.கணபதிப்பிள்ளை முகதாவில் 3275ஆம் இலக்க அறுதி மூலம் கனகசபை முத்துலிங்கத்திற்கு அறுதியாக வழங்கப்பட்டுள்ளது.

ஆதனவிபரம்,

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரி கோவில்பற்று சாவகச்சேரி இறை குசவர் குழி நிலப்பரப்பு 2 (10) பதிவுப் புத்தகத்தில் **f-266** பக்கம் **Carrieu over to F-808** பக்கம் 176 இவ் ஆதனத்தை நில அளவையாளர் நுணாவில் சின்னையா சர்வேஸ்வரன் அவர்களால் 2010ஆம் ஆண்டு 1 என சுட்டப்பட்ட பாகம் நிலப்பரப்பு பத்து (10) குழி பூச்சியம் மூன்று தசம் இரண்டு மூன்று (03.23).

இதற்கு எல்லைகளாக,

வடக்கு: சுந்தரம்பிள்ளை மகள் அம்மாக்குட்டிக்கும் கந்தசாமி முரளிதரன் மனைவி புஸ்பராணிக்கும்
கிழக்கு: கல்லிட்ட நகரசபைக்குரிய ஒழுங்கை
தெற்கு: ஜெகசோதி மனைவி பரமேஸ்வரிக்கும் கந்தையா சுப்பிரமணியத்திற்கும் உரிய ஆதனம்
மேற்கு: சுகந்தன் மனைவி வினோதினிக்குரிய ஆதனம்

தற்போது கனகசபை முத்துலிங்கம் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களாயின் இங்குள்ள உறவினர்கள் ஊடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்தின் உரிமையாளரது பெயரிற்குப் பதிலாக விண்ணப்பதாரியின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ் உட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நகராட்சி மன்றம் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி. சிவமங்கை இராமநாதன், தவிசாளர்,
நகராட்சி மன்றம், சாவகச்சேரி.**

அகவை நிறைவில் அன்பான பிறந்தநாள் வாழ்த்துக்கள்




உயர்திரு.
**தேவராசா
வைகுந்தன்**
(தென்னை பயிர்ச்செய்கை
பிராந்திய முகாமையாளர்)

49 ஆம் அகவையில் கால்பதித்து நிற்கும் எங்களின் கிளிநொச்சி மாவட்ட தென்னைப் பயிர்ச்செய்கை பிராந்திய முகாமையாளர் உயர்திரு **தேவராசா வைகுந்தன்** அவர்கள் சீரும் சிறப்புடன் வாழ்ந்து நற்பணிகள் ஆற்ற நாம் அனைவரும் ஒருமித்து வாழ்த்துகின்றோம். தென்னை வளர்ப்பில் அவர் ஆற்றிய பணிகள் அளப்பரியது. பசுமைத்திட்டங்கள், புதிய தொழில்நுட்ப ஆலோசனைகள் மகத்தானவை. இவர் நீண்ட காலம் நற்சுகத்தோடு வாழ்ந்து எமக்கு மென் மேலும் சேவையாற்ற இந் நன்னாளில் வாழ்த்தி நிற்கிறோம்.

**கிளிநொச்சி மாவட்ட கற்பகதரு சங்கங்கள்**

(9187)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம் / வெளிநாடு

## மியன்மார் சுரங்க விபத்து
# மண்சரிவில் சிக்கி 70 பேர் மாயம்



(பர்மா)
வடக்கு மியன்மாரில் சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட மண் சரிவில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 70 பேர் காணாமல் போயுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் சட்ட விரோத சுரங்கத் தொழிலாளர்கள் என நம்பப்படும் நிலையில், மீட்புப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

பச்சை மாணிக்க கற்களை வெட்டி எடுக்கும் பணியில் 100 தொழிலாளர்கள் ஈடுபட்டிரு ந்ததாக தகவல் தெரிவிக்கின்றது. (நி-5)

# உலகின் முதல் எஸ்.எம்.எஸ். 107,000 யூரோக்களுக்கு




(பாரிஸ்)
பிரிட்டிஸ் தொலைத்தொடர்பு நிறுவனமான வோடபோனால் பிரான்ஸ் தலைநகர் பாரிசில் உலகின் முதல் எஸ்.எம்.எஸ். 107,000 யூரோக்களுக்கு ஏலம் போனது.

1992 ஆம் ஆண்டு டிசெம்பர் 3 ஆம் திகதி வோட போன் என்ஜினியர் நீல் பாப் வொர்த் தனது கணனியில் இருந்து இங்கிலாந்தில் உள்ள தனது மேலாளருக்கு 'மேரி கிறிஸ்மஸ் (கிறிஸ்மஸ் வாழ்த்து) என்று எஸ்.எம்.எஸ். அனுப்பினார். இதுதான் உலகின் முதல் எஸ்.எம்.எஸ். ஆகும்.

கண்ணுக்குத் தெரியாத பொருட்களை விற்பனை செய்வது பிரான்சில் சட்டபூர்வமானதல்ல. எனவே குறுஞ் செய்தியை டிஜிற்றல் சட்டகத்தில் தொகுத்து குறியீடு மற்றும் தகவல் தொடர்பு நெறிமுறையை கடைப்பிடித்து ஏலம் விடப்பட்டது. (நி-5)

# ஒரே ஒருவருக்கு கொரோனா தொற்று
## பொதுப் போக்குவரத்திற்கு தடை விதித்த சீனா

(பீஜிங்)
சீனாவில் கண்டறியப்பட்ட கொரோனா தொற்றுக்கு உலக அளவில் இதுவரை 27 கோடியே 65 இலட்சத்து 89 ஆயிரத்து 592 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 53 இலட்சத்து 85 ஆயிரத்து 14 பேர் உயிரிழந்துள்ளனர். கொரோனா பாதிப்பில் இருந்து இன்னும் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் முழுமையாக மீளவில்லை.

எனினும் கொரோனா கண்டறியப்பட்டவுடன் சீனாவில் கடும் கட்டுப்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதனால் உலக அளவில் பாதிப்பு பட்டியலில் சீனா 113 ஆவது இடத்தில் உள்ளது. இந்நிலையில் வியட்நாம் நாட்டை ஒட்டி அமைந்துள்ள சீனாவின் டாங் ஜிங் நகரில் நேற்று முன்தினம் ஒருவர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டமை கண்டறியப்பட்டது.

இதையடுத்து அதிரடி நடவடிக்கைகளை மாநகர நிர்வாகம் மேற்கொண்டுள்ளது. டாங்ஜிங் நகரம் முழுவதும் பொதுப்போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாத்தளங்கள், திரையரங்குகள், பொழுதுபோக்கு பூங்காக்கள் மூடப்பட்டன. பாடசாலைகளுக்கு குழந்தைகள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. ஊழியர்கள் வீடுகளில் இருந்து வேலை பார்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக சீன தொலைக்காட்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒருவர் கொரோனாவால் பாதிக்கப்பட்டதற்கு மாநகரம் முழுவதும் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் சர்வதேச பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. (நி)

# நான்காவது தடுப்பூசியை செலுத்த இஸ்ரேல் தீர்மானம்

(ஜெருசலேம்)
புதிய ஒமிக்ரோன் மாறுபாட்டை கட்டுப்படுத்தும் முயற்சியின் ஒருபகுதியாக நான்காவது தடுப்பூசியை வழங்க இஸ்ரேல் திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில் தொற்றுநோய் நிபுணர்கள் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களுக்கு நான்காவது தடுப்பூசியை பரிந்துரைத்துள்ளனர்.

இந்தத் திட்டத்தை வரவேற்றுள்ள இஸ்ரேல் பிரதமர் நஃப்டலி பென்னட், அதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

இஸ்ரேலில் குறைந்தது 340 ஒமிக்ரோன் தொற்று நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் ரத்து
## பக்கிங்ஹாம் அரண்மனை தெரிவிப்பு



(லண்டன்)
ஒமிக்ரோன் பரவலின் எதிரொலியாக சாண்ட்ரிங்ஹாம் அரண்மனையில் நடக்கும் பாரம்பரிய கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களை ராணி 2 ஆம் எலிசபெத் ரத்து செய்துள்ளதாக பக்கிங்ஹாம் அரண்மனை தெரிவித்துள்ளது.

இங்கிலாந்தில், உலகின் வேறெந்த நாடுகளிலும் இல்லாத அளவுக்கு ஒமிக்ரோன் வைரஸ் வேகமாகப் பரவி வருகிறது.

இந்த நிலையில் ஒமிக்ரோன் பாதிப்பு அதிகரித்து வருவதன் காரணமாக இங்கிலாந்து ராணி 2 ஆம் எலிசபெத், தனது வழக்கமான கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களை ரத்துச் செய்துள்ளார்..95 வயதான ராணி 2 ஆம் எலிசபெத் ஒவ்வொரும் ஆண்டும் சாண்ட்ரிங்ஹாம் அரண்மனையில் அரச குடும்பத்தினருடன் சேர்ந்து கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடுவதை பாரம்பரியமாக கடைப்பிடித்து வருகிறார்.

இந்த நிலையில் சாண்ட்ரிங்ஹாம் அரண்மனையில் நடக்கும் பாரம்பரிய கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களை ராணி 2 ஆம் எலிசபெத் ரத்து செய்துள்ளதாக பக்கிங்ஹாம் அரண்மனை தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டும் கொரோனா வைரஸ் காரணமாக ராணி 2 ஆம் எலிசபெத் தனது பாரம்பரிய கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களை ரத்து செய்தமை குறிப்பிடத்தக்கது.

# தஜிகிஸ்தான் வங்கிக் கணக்கிற்கு
## தவறுதலாக பணம் அனுப்பிய தலிபான்கள்

(காபூல்)
சில நாட்களுக்கு முன்பு தஜிகிஸ்தானில் உள்ள ஆப்கானிஸ்தான் தூதரகத்தின் வங்கிக் கணக்கில் தலிபான்கள் தவறுதலாக சுமார் 800,000 அமெரிக்க டொலர் பணத்தை அனுப்பியதாக தஜிகிஸ்தானில் உள்ள Avesta செய்தி இணையத்தளம் தெரிவித்திருந்தது.

என்ன செய்வது என அறியாமல் பணத்தை திருப்பி அனுப்புமாறு கூறி தற்போது தாலிபான் அமைப்பு தவித்து வருகிறது.

இருப்பினும், தலிபான்களை பயங்கரவாத அமைப்பாக தஜிகிஸ்தான் கருதும் நிலையில், அரசு அதிகாரிகள், பணத்தைத் திரும்பப் பெறுவதற்கான சாத்தியக் கூறு ஏதும் இல்லை என மறுத்துள்ளனர். (நி-5)

# சிறைக்கூடங்களை வாடகைக்கு விடத் தீர்மானம்- கொசொவோ



(ஹோபென்ஹெஜென்)
ஸ்கண்டினேவியன் சிறைச்சாலைகளின் நெரிசலைக் குறைப்பதற்காக டென்மார்க்கிற்கு வாடகைக்கு வழங்க கொசொவோ குடியரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

300 சிறைக்கூடங்களை வாடகைக்கு விடுவதற்கு கொசோவோ ஒப்புக் கொண்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

5 வருடங்களுக்கான ஒப்பந்த அடிப்படையில் இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய, குறித்த காலப்பகுதிக்கான வாடகையாக டென்மார்க் அரசாங்கத்தினால் வருடாந்தம் 15 மில்லியன் யூரோ செலுத்தப்படவுள்ளதுடன் நாட்டின் பசுமைத் திட்டத்திற்கும் நிதியுதவி வழங்கப்படவுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிகைக் காலத்தில் வியாபாரிகள் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும்

## சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி



(சாவகச்சேரி)

பண்டிகைக் காலத்தில் வியாபாரிகள் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டுமென சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தெரிவித்தார்.

அண்மையில் சாவகச்சேரி நகர வியாபாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது பண்டிகைக் காலம் என்பதால் வியாபாரிகள் கொரோனா நிலைமை மற்றும் திருடர்கள் தொடர்பில் விழிப்புணர்வோடு செயற்பட வேண்டும்.

அத்துடன் அதிகளவான மக்கள் நகரை நாடி வருவார்கள். எனவே வர்த்தக நிலையங்களில் உரிய கொரோனா பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

இரவு வேளைகளில் சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள். இதன்போது குறிப்பிட்ட கடைகள் மற்றும் ஆலயங்களில் கையொப்ப புத்தகங்கள் காட்சிப்படுத்தும் பட்சத்தில் பொலிஸாரின் வருகையை உறுதிப்படுத்தும் முகமாக குறித்த புத்தகத்தில் கையொப்பம் இடும் நடைமுறையைப் பின்பற்ற முடியும்.

இயன்றவரை வர்த்தகர்கள் தமது கடைகளில் பாதுகாப்புக் கமராக்களை பொருத்துங்கள். பொதுமக்களுக்கு எந்த நேரத்திலும் சேவையாற்ற சாவகச்சேரி பொலிஸார் தயாராக உள்ளனர் என அவர் தெரிவித்தார். (4-5-30)

# கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட சிறுவனுக்குக் கொரோனாத்தொற்று

(நெளுக்குளம்)

வவுனியா கொக்குவெளிப் பகுதியில் கிணற்றில் நீராடச் சென்று உயிரிழந்த சிறுவனுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

வவுனியா கொக்குவெளிப் பகுதியில் மாடுகளை மேய்த்துக்கொண்டிருந்த சிறுவன் அருகில் உள்ள, கிணற்றில் குளிக்கச்சென்ற நிலையில் கிணற்று நீரினுள் மூழ்கி மரணமடைந்தார்.

இந்நிலையில் கிராம மக்களின் முயற்சியால் கிணற்றுநீர் வெளியில் இறைக்கப்பட்டு குறித்த சிறுவனின் சடலம் மீட்கப்பட்டது.

அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (4-5-299)

# ஆலயங்களில் திருட்டு

(பூநகரி)

கடந்த இரு வாரங்களுக்குள் பூநகரிப் பகுதியில் உள்ள நான்கு ஆலயங்களில் இருந்து 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட ஆலய உடைமைகள் திருடப்பட்டுள்ளதாக பூநகரி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பூநகரி சோபாலபிட்டி சித்தி விநாயகர் ஆலயம், ஈச்சங்காடு வைரவர் ஆலயம், கட்டுக்கரைப் பிள்ளையார் ஆலயம், தம்பிராய் விடத்தற்பளை ஆலயம் ஆகியவற்றிலேயே திருட்டுக்கள் இடம்பெற்ற நிலையில் பூநகரி பொலிஸ் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-5-84)

# 'முந்துதமிழ்' நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைக் கம்பன் கழகமும் அவுஸ்திரேலியக் கம்பன் கழகமும் இணைந்து நடத்தும் "முந்து தமிழ்" எனும் மாதாந்த இயலரங்கின் டிசெம்பர் மாத நிகழ்வு நாளை மறுதினம் 25 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு நிகழ்நிலை நிகழ்வாக நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வை **AKILAILANGAI KAMBAN KAZHAGAM ,KAMBAN KAZHAGAM AUSTRALIA** எனும் யூடியூப் முகவரிகளிலும் **KAMBA VARITHY ILANKAI JEYARAJ, KAMBAN KAZHAGAM AUSTRALIA** எனும் பேஸ்புக் முகவரிகளிலும் பார்வையிட முடியும் என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (4-5)

# வவு. வடக்கு பிரதேச சபையை இழந்தது கூட்டமைப்பு

(நெளுக்குளம்)

வவுனியா வடக்கு பிரதேச சபையின் ஆட்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இழந்துள்ளதுடன் புதிய தவிசாளராக சுதந்திரக்கட்சியின் த. பார்த்தீபன் தெரிவு செய்யப்பட்டார்.

வவுனியா வடக்கு பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான பாதீடு சபையில் சமர்ப்பிக்கப்பட்டு இருதடவைகளும் தோல்வியடைந்தன.

இதனையடுத்து உள்ளூராட்சி சட்டங்க ளின் பிரகாரம் புதிய தவிசாளரை தேர்வு செய்வதற்கான தேர்தல் அறிவிக்கப்பட்டது.

குறித்த தேர்தல் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நேற்றுக் வடக்கு பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது.

இதன்போது சபையின் 26 உறுப்பினர்களில் 25 உறுப்பினர்கள் சமுகமளித்திருந்தனர்.

இதன்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பை சேர்ந்த சோ. சத்தியேந்திரன் மற்றும் சுதந்திரக்கட்சியின் த.பார்த்தீபனின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டன. இருவர் பரிந்துரை செய்யப்பட்டமையால் தவிசாளர் தெரிவு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது.

வாக்கெடுப்பில் தவிசாளர்களாக பரிந்துரை செய்யப்பட்ட இருவருக்கும் தலா 12 வாக்குகள் கிடைக்கப் பெற்றன. ஒரு வாக்கு எவருக்கும் வழங்கப்படாமல் நிராகரிக்கப் பட்டிருந்தது.

இதனையடுத்து திருவுளச் சீட்டு மூலம் தவிசாளரை தேர்வு செய்வதாக ஆணையாளர் அறிவித்தார். இதனையடுத்து சபை முன் னிலையில் இருவரது பெயரும் திருவுளச் சீட்டில் எழுதப்பட்டு தெரிவு செய்யப்பட்டது. அதன் மூலம் சுதந்திரக்கட்சியினை சேர்ந்த த.பார்த்தீபன் தவிசாளராக தேர்வுசெய்யப்பட்டார். (4-5-299)

# நனோ திரவ உரம் பயனளிக்கவில்லை

## விவசாயிகள்

(பூநகரி)

பூநகரி கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட 19 கமக்கார அமைப்பைச் சேர்ந்த விவசாயிகள் 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் விவசாயம் செய்தபோதும் இம்முறை எதிர்பார்த்த விளைச்சலை பெறமுடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

யூரியா உரம் வழங்கப்படாமையாலும் யூரியாவுக்குப் பதிலாக வழங்கப்பட்ட நனோ திரவ உரம் மற்றும் **ECO vita** என்ற திரவ உரத்தினாலும் எந்தவிதப் பயனும் ஏற்படவில்லையெனவும் பச்சைப் பசேலென்று இருந்த பயிர்கள் மஞ்சள் நிறமாக மாறியுள்ளதாகவும் தெரிவித்தனர். (4-5-84)

# வெடிக்காத நிலையில் கைக்குண்டுகள் மீட்பு



(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறிகண்டியில் உள்ள பற்றைக்காட்டுப் பகுதியில் இரண்டு கைக்குண்டுகள் இராணுவத்தினரால் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளன. இவ்விடயம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய நீதிமன்ற அனுமதியுடன் சிறப்பு அதிரடிப் படையினரால் குறித்த இரு கைக்குண்டுகளையும் செயலிழக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. (4-5-316)

# மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு இரு உயர்நிலை விருது

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ரீதியாக பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற தேசிய உற்பத்தித்திறன் போட்டி-2020 இல் மானிப்பாய் இந்துக் கல்லூரி **Special Commendation** (விசேட மெச்சுரை) என்னும் விருதை வென்றுள்ளது.

மேலும் கலை நிறுவனாங்களுக்கிடையிலான தேசிய மட்டப் போட்டியிலும் மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களான எஸ். தனுஜன், கர்நாடக சாஸ்திரியப் பாடல் போட்டியில் முதலிடத்தையும் எஸ்.கபிநாத், பாரம்பரிய தமிழ்க் கிராமியப் பாடல் போட்டியில் முதலிடத்தையும் மற்றும் பாரம்பரிய தமிழ் கிராமியப் பாடல் குழுப் போட்டியில் முதலிடத்தையும் மானிப்பாய் இந்துக் கல்லூரி பெற்றுள்ளது. (4-5)

# அடிப்படை வசதிகளின்றி காணப்படும் அம்பாள்புரம், கொல்லவிளாங்குளம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அம்பாள்புரம் மற்றும் கொல்லவிளாங்குளம் ஆகிய கிராமங்களுக்கான போக்குவரத்து வசதி இன்மையால் தொடர்ந்தும் சிரமங்களை எதிர்கொள்வதாகப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அம்பாள்புரம் மற்றும் கொல்லவிளாங்குளம் ஆகிய பிரதேசங்களுக்கான பிரதான போக்குவரத்து வீதி நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாத நிலையில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தற்போது பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால் தினமும் பாடசாலை மாணவர்கள் போக்குவரத்துக்களில் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

1972 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பல்வேறு இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்தவர்கள் குடியேறி வாழ்ந்து வரும் குறித்த கிராமத்தில் அடிப்படை வசதிகள் இன்மை மற்றும் போக்குவரத்து வசதி இன்மை எனப் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வாழ்ந்து வருவதாகவும் அங்குள்ள மக்கள் தெரிவித்தனர். (4-5-315)

# அண்ணன்- தம்பி தகராறு கத்திக்குத்தில் முடிந்தது

(சாவகச்சேரி)

கொடிகாமம்-மந்துவில் கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற கத்திக் குத்துச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

பணக் கொடுக்கல்-வாங்கலில் அண்ணன்-தம்பிக்கு இடையே ஏற்பட்ட தகராறே கத்திக்குத்துக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் மந்துவில் பகுதியைச் சேர்ந்த 29 வயது நபர் ஒருவரே சகோதரனின் கத்திக்குத்து தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (4-5-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 16.12.2021 - 13.01.2022



**உங்கள் கொள்கைகளை விட்டுக்கொடுக்காத சிம்ம இராசி வாசகர்களே!**

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, குருவின் பரிபூரண பார்வை உங்கள் இராசியில் பதிவதால் நினைத்தது நிறைவேறும். நிகழ்காலத் தேவை பூர்த்தியாகும். மனதளவில் செய்ய நினைத்த காரியங்களை மறுநிமிடமே செய்து முடிப்பீர்கள். பணத்தேவை உடனுக்குடன் பூர்த்தியாகும்.

**சப்தம குருவின் சஞ்சாரம்**

மாதத் தொடக்கத்தில் சப்தம ஸ்தானத்தில் குரு பகவான் சஞ்சரிக்கிறார். பஞ்சம அஷ்டமாதிபதியான குரு உங்கள் இராசியைப் பார்க்கும் பொழுது பல நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். கொடுக்கல்-வாங்கல்களில் இருந்த பிரச்சினைகள் அகலும். வளர்ச்சிக்கு உறுதுணையாக நண்பர்கள் விளங்குவர். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு யோகமான நேரம் இது.

**மகர புதனின் சஞ்சாரம்**

மார்கழி 12 ஆம் திகதி மகர இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு தன லாபாதிபதியானவர் புதன். அவர் 6 ஆம் இடத்தில் சனியோடு சேர்ந்து சஞ்சரிக்கின்றார். எனவே ஜீவன ஸ்தானம் வலுப்பெறுகின்றது. வளர்ச்சிக்குப் பங்குதாரர்கள் உறுதுணைபுரிவர். கேட்ட இடத்தில் உதவி கிடைக்கும்.

வீடு மாற்றங் களும், வெளியூர் பயணங்களும் நன்மை தரும். புதிய சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டாகும். வாடகை கட்டிடத்தில் இருந்து தொழிலை சொந்தக் கட்டிடத்திற்கு மாற்றும் எண்ணம் கைகூடும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உயர் மட்ட அதிகாரிகளின் பழக்கத்தால் நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். வெளிநாட்டில் இருந்தும் கூட மகிழ்ச்சிகரமான செய்தி வந்து சேரும்.

## பணத் தேவை உடனுக்குடன் பூர்த்தியாகும்!

**தனுசு சுக்ரனின் சஞ்சாரம்**

மார்கழி 25-ந் தேதி தனுசு ராசிக்கு சுக்ரன் வக்ர இயக்கத்தில் வருகின்றார். உங்கள் ராசிக்கு 3, 10ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் உங்கள் இராசிநாதன் சூரியனோடு சேர்ந்து சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் நினைத்தது நிறைவேறும். நிகழ்காலத் தேவை பூர்த்தியாகும். அனைத்துப் புது முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள்.

பூர்வீக சொத்துத் தகராறு அகலும். உடன்பிறப்புகள் உங்களுக்குரிய




பங்கை கொடுக்க முன்வருவர். வாங்கிய சொத்தில் ஒரு பகுதியைக் கொடுத்துவிட்டு, அதன் மூலம் வரும் தொழிலை விரிவுபடுத்த முயற்சிப்பீர்கள். மங்கல நிகழ்ச்சி மனையில் நடைபெற வழி பிறக்கும். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் நேரம் இது.


**தனுசு புதனின் சஞ்சாரம்**

மார்கழி 27 ஆம் திகதி தனுசு இராசிக்குப் புதன் வக்ர இயக்கத்தில் செல்கின்றார். தன லாபாதிபதி புதன் 5 இல் சஞ்சரிக்கும் இந்த நேரம் பிள்ளைகள் வழியில் உதிரி வருமானங்கள் கிடைக்கும். அவர்களின் வேலை சம்பந்தமாக நீங்கள் செய்த முயற்சி கைகூடும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பணியில் இருப்பவர்களுக்கு ஊதிய உயர்வும், உத்தியோக உயர்வும் கிடைக்கலாம். பொதுவாழ்வில் புதிதாக ஈடுபட்டு இருப்பவர்களுக்கு புதிய திருப்பங்கள் ஏற்படும். இம்மாதம் தென்முகக் கடவுள் வழிபாடு நன்மைகளை வழங்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்யாணம் சிறப்பாக முடிய வழிபிறக்கும். வீட்டை விரிவு செய்து கட்டும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. பணிபுரிபவர்களுக்கு எதிர்பார்த்தபடியே உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும். அரசு வேலைக்கு முயற்சித்தவர்களுக்கு அதுவும் கைகூடலாம்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**வழிபாட்டின் மூலமே வளர்ச்சி கூடும் எனச் சொல்லும் கன்னி இராசி வாசகர்களே!**

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன், விரயாதிபதி சூரியனுடன் இணைந்து சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே ஆரோக்கியம் சம்பந்தமாக அச்சுறுத்தல்களும் அதனால் விரயங்களும் ஏற்படலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறுவதில் தடைகளும், தாமதங்களும் ஏற்படும்.

**ஆறாமிடத்தில் குருவின் சஞ்சாரம்**

மாதத் தொடக்கத்தில் குரு பகவான் 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். '6 இல் குரு ஊரில் பகை' என்பது பழமொழி. அந்த அடிப்படையில் மறைமுக எதிர்ப்பு கொஞ்சம் அதிகரிக்கலாம். இருப்பினும், எதிரிகள் ஸ்தானாதிபதி சனி சொந்த வீட்டில் மகரத்தில் வலுப்பெற்றிருப்பதால் பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாது. தொழில், உத்தியோகத்தில் உடன் பணிபுரிபவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. வழக்குகள் இழுபறி நிலையில் இருக்கும். குருவின் பார்வை 12 ஆம் இடத்தில் பதிவதால் சுப விரயங்கள் அதிகரிக்கும்.

**மகர புதனின் சஞ்சாரம்**

மார்கழி 12 ஆம் திகதி மகர இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு அதிபதியாகவும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் புதன் பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். பூர்வீக சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொள்வதில் இருந்த பிரச்சினை அகலும். பிள்ளைகளின் கல்யாண முயற்சியில் வெற்றி கிடைத்து மகிழ்ச்சியடையச் செய்யும்.

புதிய தொழில் தொடங்க நண்பர்கள் கூட்டாளியாவர். பணிபுரிபவர்களுக்கு, கேட்ட சலுகைகள் கிடைப்பதோடு மட்டுமல்லாமல் இல்ல மாற்றங்களும் எளிதில் வந்துசேரும்.

**தனுசு சுக்ரனின் சஞ்சாரம்**

மார்கழி 25 ஆம் திகதி தனுசு இராசிக்கு சுக்கிரன் வக்கிர இயக்கத்தில் வருகின்றார். உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் சுக ஸ்தானத்தில் சூரியனோடு வந்து சேரும் இந்த நேரத்தில், வாழ்க்கைத் தேவை அதிகரிக்கும். வசதிகளைப் பெருக்கிக் கொள்ள கடன்




வாங்கும் சூழ்நிலை கூட ஏற்படலாம். பொதுவாழ்வில் பிரச்சினைகள் அதிகரிக்கும். தந்தை வழி உறவில் விரிசல் உருவாகும். பணிபுரியும் இடத்தில் மேலிடத்து நிர்ப்பந்தம் அதிகரிக்கும். திடீரென்று இனிமை தராத இடத்திற்கு இடமாற்றங்கள் உருவாகலாம். வேலைப்பளு அதிகரிக்கும் நேரம் இது.

**தனுசு புதனின் சஞ்சாரம்**

மார்கழி 27ஆம் திகதி தனுசு இராசிக்கு புதன் வக்கிர இயக்கத்தில் செல்கிறார். உங்கள் இராசிநாதன் வக்கிரம் பெறும்பொழுது ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். இருப்பினும் 'புத ஆதித்ய யோகம்' இருப்பதால் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடிவரும். பெற்றோர்களின் மணிவிழாக்கள் மற்றும் இல்லம் கட்டிக் குடியேறும் வாய்ப்புகள் வரலாம்.

வருமானம் சீராக இருந்தாலும் சமாளிக்க முடியாத அளவிற்கு விரயங்கள் ஏற்படும். செய்தொழிலில் இடமாற்றம் செய்யலாமா? என்று சிந்திப்பீர்கள். நண்பர்களிடம் பகையை வளர்த்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது. இம்மாதம் பெருமாள் வழிபாடு பெருமைகளை சேர்க்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் பொருளாதாரத்தில் நிறைவு ஏற்பட்டாலும் விரயங்களும் அதிகரிக்கும். சேமிப்பு கரையலாம். கணவன் - மனைவிக்குள் அனுசரித்துச் செல்வது நல்லது. பஞ்சாயத்து இழுபறி நிலையில் இருக்கும். பிள்ளைகளின் கல்யாணம், பெற்றோர்களின் மணிவிழாக்கள் நடைபெற வழிபிறக்கும். பணிபுரியும் பெண்களுக்கு சகப் பணியாளர்களால் தொல்லை உண்டு. படிப்பிற்கேற்ற உத்தியோகம் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம்.

## பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்படலாம்!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வுகள் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் முன்னெடுக்கப்படும் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக நோயாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

7 கோரிக்கைகளை முன்வைத்து, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் நாடளாவிய ரீதியில் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட குறித்த பணிப்பகிஷ்கரிப்பு நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக் குழுவின் உறுப்பினர், மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் இந்த விடயத்தினை உறுதிப்படுத்தினார்.

பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டாலும் அத்தியாவசிய மற்றும் அவசர சிகிச்சை பிரிவுகளின் செயற்பாடுகள் உரியவாறு முன்னெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (நி-5)

# மொரட்டுவ பல்கலைக்கு வழங்கப்பட்ட போர் விமானம்

(கொழும்பு)

சேவையில் இருந்து நீக்கப்பட்ட மிக்-27 போர் விமானத்தை மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் நிரஞ்சன் குணவர்தனவிடம் விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன கடந்த திங்கட்கிழமை உத்தியோக பூர்வமாக கையளித்தார்.




மொரட்டுவ பல்கலைக் கழகத்தின் இயந்திர பொறியியல் துறை மாணவர்கள் விமானப் பாடநெறிகளில் நடைமுறை அறிவைப் பெறுவதற்கு இந்த விமானம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

மொரட்டுவ பல்கலைக் கழகத்தின் இயந்திர பொறியியல் பீடத்தின் விமானப் படை பொறியியல் பிரிவின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த நன்கொடை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# தெற்கு அதிவேக நெடுஞ்சாலை விபத்தில் இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அதிவேக நெடுஞ்சாலையில் கொட்டாவயிலிருந்து மத்தள செல்லும் வீதியில், பாலடுவ மற்றும் கப்புதுவ ஆகிய இடைமாறல்களுக்கு இடைப்பட்ட பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கொள்கலன் வாகனத்தின் உதவியாளரான கடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 72 வயதான ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார். (நி-5)

# பெறப்பட்ட கடன்கள் மீளச் செலுத்தப்படும்



## வதந்திகளை நம்ப வேண்டாம் என்கிறார் ஆளுநர்

(கொழும்பு)

இலங்கையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்கள் அனைத்தும் திருப்பிச் செலுத்தப்படும் என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த ஆளுநர், இந்த விடயத்தில் பொது மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் கேட்டுக்கொண்டார்.

மேலும் இலங்கையிடம் 3 பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு கையிருப்பு இருப்பதாகவும் இது குறித்து பொதுமக்கள் அச்சம் கொள்ள வேண்டாம் எனவும் குறிப்பிட்ட அவர் சமூக ஊடகங்களில் வெளியாகும் கருத்துக்கள் பொய்யான வதந்திகள் எனத் தெரிவித்தார்.

இவ்வாறான வதந்திகள் நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் குறிப்பிட்டார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

## மற்றவர்களின் நேரம்

நம் நேரத்தை வீணாக்க நமக்கு உரிமை இருக்கிறது. ஆனால், அப்படி மற்றவர்களின் நேரத்தை வீணாக்க உரிமை கிடையாது. எனவே நம் நேரத்தைவிட மற்றவர்களின் நேரம் பொன்னானது.

தெருவிலாகட்டும் பொது இடங்களிலாகட்டும், வீட்டிலாகட்டும் எங்கும் சுருக்கமாவும் உடனடியாக விடயத்திற்கு வருவது போலவும் பேச வேண்டும். அப்போதும் கூட நீங்கள் பேச எடுத்துக் கொள்ளும் நேரத்தைக் காட்டிலும் எதிராளிக்கு அதிகம் பேச வாய்ப்புக் கொடுக்க வேண்டும். அப்படி ஒரு வாய்ப்பை நீங்கள் தொடர்ந்து அளிப்பீர்களானால் உங்களை அனைவரும் விரும்பத் தொடங்குவார்கள்; உயர்வாக எண்ணுவார்கள்; உதவுவார்கள்.

கால்மணி நேரம் அதிகபட்சமாக அரைமணி நேரம் அதற்கு மேல் சுவாரசியமாக என்ன பேசிவிட முடியும்? போய் வருகிறேன் என்று சொல்லிப் பாருங்கள் உடனே அவர்கள் முகத்தில் புன்னகை மலர்ந்தால் ஏதோ பயங்கரப் பிராணியிடமிருந்து தப்பிப்பதைப் போன்ற உணர்ச்சி வெளிப்பட்டால் நீங்கள் எப்பொழுது போய் வருகிறேன் என்று சொல்வீர்கள் என்பது அவர்களது மனப்பூர்வமான ஆசையாக இருந்திருக்கும். மாறாக இருங்கள் போகலாம் என்றால் மட்டுமே நீங்கள் மேலும் சற்று நேரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்.

மணிக்கணக்கில் எவ்வளவு சுவாரசியமான விடயங்களை அன்று பேசிக் கொண்டிருந்தாலும் மறுநாள் காலை நீங்கள் அந்தப் பக்கமாகப் போனால் அவர்கள் உங்களைப் பார்த்துவிட்டுக் காததூரம் ஓடுமளவிற்கோ உங்கள் பார்வையில் பட்டுவிடக் கூடாதோ என்று அவர்கள் கவலைப் படுமளவிற்கோ தான் நிலைமை நிலவும்.

நான் உங்களது நேரத்தை வீணடிக்கிறேனா? உங்களுக்கு ஏதும் அவசரமா? என்பன போன்ற கேள்விகளை நாம் இடையிடையே கேட்டுக் கொள்ள வேண்டும். இத்தகைய கேள்விகள் நாம் மற்றவர்களைத் தொல்லைப்படுத்துவதை விரும்பவில்லை என்பதை உரியவர்களுக்கு உணர்த்துவதோ? மேலும் ஒரு நன்மையையும் தருகிறது. அதாவது அவர்கள் இல்லை, ஆமாம் என்று சொல்வதன் முகக்குறிப்பையும் வேகத்தையும் வைத்து நாம் ஒரு முடிவுக்கு வந்து விரைவில் கழற்றிக் கொள்ள வசதியாக இருக்கும்.

ஒருவர் வீட்டிற்குப் போய் நாம் தங்க வேண்டி வருகின்றது என்று வைத்துக் கொள்வோம். நம்முடைய வரவால் அவருடைய வழக்கமான வாழ்க்கைப் பொழுது வீணாகக் கூடாது என்பதிலும் நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

ஒட்டுமொத்தமாகச் சொல்ல வேண்டுமென்றால் மற்றவர்களின் நேரத்தை அவர்களது பயனுக்காக, அவர்களது நன்மைக்காக நீங்கள் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் உங்கள் நன்மைக்காக எடுத்துக் கொள்ளக் கூடாது.

இந்த உண்மையை உணர்ந்து கொண்டால் உங்களை அவர்கள் வரவேற்கும் முறை "வாங்க வாங்க வாங்க அல்லது ஹலோ ஹலோ ஹலோ" என்று தடபுடலாக இருக்கும்.

இல்லையென்றால் அவர்களது வரவேற்பு வரவேற்பாக இருக்காது. மாறாக வெறுப்பின் பிரதிபலிப்புக் கலந்த சம்பிரதாயமான வரவேற்பாக இருக்கும்.


**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## நானே ராஜா



நரிக்கு தலைக்கனம் அதிகமாகி விட்டது. அதுமட்டும் தலைவ ராக வந்துவிட்டால் அதன் தலைக்கனம் இன்னும் அதிகமாகி விடும். எனவே, நரி தலைவர் ஆவதை நான் வெறுக்கிறேன்," என்றது மான்.

அதனைத் தொடர்ந்து எல்லா மான்களும், அவ்வாறே சொல்லத் தொடங்கின. குரங்குகள், மான்கள் மட்டுமல்லாது எல்லா விலங்குகளுமே நரியின் செயலுக்கு தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தன. அது தலைவர் ஆவதை எதுவும் விரும்பவில்லை.

ஓரிரு நாட்களுக்குப் பின்னர் சிங்கம் அனைத்து விலங்குகளின் கூட்டத்தைக் கூட்டியது. அக் கூட்டத்தில் காட்டில் வசித்து வரும் அனைத்து விலங்குகளும் கலந்து கொண்டன. சிங்கம் அனைத்து விலங்குகளின் கருத்தைக் கேட்டது.

"சிங்கராஜா! இந்த நரியைப் பற்றி நாங்கள் நன்றாகவே அறிவோம்! இந்த நரியை நீங்கள் தலைவராக நியமித்தால் நாங்கள் எல்லோரும் துன் பப்படுவது உறுதி," என்றன.

"அப்படியானால், நான் யாரைத் தலைவராக நியமித்திட வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர் கள்?" என்று கேட்டது சிங்கம்.

"சிங்கராஜா! இந்தக் கூட்டத்தில் எங்கள் அனைவருக்கும் பிடித்தமான ஒரு வர் இருக்கிறார். அவர் தலைவராக வந்தால் நாங்கள் எல்லோருமே கவலையில்லாமல் மகிழ்ச்சியுடன்வாழ்வோம்

ஆனால், அவரை நீங்கள் தலைவராக ஏற்றுக் கொள்வீர்களா? இல்லை மாட்டீர்களா? என்பது தான் எங்களுக்கெல்லாம் சந்தேகத்தினை ஏற்படுத்துகின்றன" என்றன.

"அன்பான நண்பர்களே! நான் உங்களது நல்லெண்ணத்தையே கருதி நாள் தோறும் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். எனவே, நீங்கள் யாரை தலைவராக நியமிக்கச்சொல்கின்றீர்களோ, அவரையே நான் தலைவராக நியமிக்கிறேன்.

அவர் யாராக இருந்தாலும் அதனைப் பற்றி நான் கவலைப்படமாட்டேன். அவர் உங்களுக்கு நல்லவர் என்றால் எனக்கும் நல்லவர்தான்.

எனவே, இக்கூட்டத்தில் இருக்கிற அவரை எனக்கு இப்போதே அடையாளம் காட்டிடுங்கள்" என்றது சிங்கம்.

"சிங்கராஜாவே! ஒரு முறை இந்தக் காட்டில் நாம் எல்லோரும் குடிநீர் கிடைத்திடாமல் தவித்துக் கொண்டிருந்த போது, நமது கஷ்டமான நிலையினை உணர்ந்து இரண்டு மூன்று நாட்கள் ஓய்வில்லாமல் அலைந்து திரிந்து நமக்கு தண்ணீர் இருக்கின்ற இடத்தினை அடையாளம் காட்டி பேராபத்திலி ருந்து நம்மைக் காப்பாற்றினாரே! அவரைத் தான் தலைவராக நியமிக்க வேண்டும் என்று நாங்கள் எல் லோரும் கேட்டுக் கொள்கிறோம் என்றன விலங்குகள். அதனைக் கேட்ட சிங்கம் மகிழ்ச்சியடைந் தது.

"நண்பர்களே! நீங்கள் யாரை தலைவராக நியமிக்க விருப்பப்படுகின்றீர்கள் என்பதை நானும் புரிந்து கொண்டேன். நமக்குத் தண்ணீரை அடையாளம் காட்டிய முயலைத் தானே நீங்கள் குறிப்பிடுகின்றீர்கள்! இந்த முயலின் நல்லெண்ணத்தை நானும் அறிவேன். அந்த முயலையே நான் தலைவராக நியமிக்கின்றேன்" என்றது சிங்கம்.

அதனைக் கேட்டதும் விலங்குகள் எல்லாம் ஆரவாரத்துடன் தங்கள் மகிழ்ச்சியைத் தெரியப்படுத்தின. கூட்டத்திலிருந்த முயல் எழுந்து வந்து, சிங்கத்தின் முன்னே வந்து நின்றது.

சிங்கம் முயலை தலைவராக நியமித்தது. அக் காட்சியைக்கண்டு எல்லா விலங்குகளும் மகிழ்ச்சியுடன் ஆரவாரம் செய்தன.

மறுநாள் நரியும், கரடியும் சந்தித்தன. நரியோ மிகவும் கவலையுடன் காணப்பட்டது. "நரியே எதற்காக கவலைப்படுகிறாய்?" என்று கேட்டது கரடி.

"கரடியே! கெட்ட எண்ணத்தாலும், அராஜகத்தாலும் நான் இந்தக் காட்டில் உள்ள விலங்குகளின் அன்பை இழந்தேன்," என்றது நரி.

"சரி நரியே! இனி மேலாவது நீ நல்லவனாக வாழ்ந்திடக் கற்றுக் கொள். நல்லவரையே யாவரும் விரும்புவர்" என்றது கரடி.

கரடியின் கருத்தினை ஏற்றுக் கொண்டது நரி. நல்லெண்ணம் கொண்டவரையே அனைவரும் விரும்புவர். புரிஞ்சுதா குட்டீஸ்!

(முற்றும்)

# மகாபாரதம்




அறிவுடையவன் தொழிலால் வரும் லாபத்தை ஒழுங்காக வரையறை செய்து கொண்டு செலவிட வேண்டும். ஒரு பாகத்தைத் தரும காரியங்களுக் காகச் செலவழிக்க வேண்டும்.

ஒரு பாகத்தைக் கொண்டு மேலும் செல்வத்தைப் பெருக்க வேண்டும். பொருள் இல்லாதவரை உலகம் ஒரு நாளும் மதிக்காது. அத்தகைய பொருளைக் கண்ணும் கருத்துமாகப் பெற முயற்சித்தல் முதல் கடமை என உணர்ந்து செயல்பட வேண்டும்.

ஒரு பாகத்தைத் திடீரென ஏற்படும் நோய்களையும் ஆபத்துகளையும் போக்கச் செலவிட வேண்டும். பொருள் இல்லாதவன் இம்மை இன்பங்களையும்மறுமை இன்பங்களையும் இழப்பான்.

உண்ணும்உணவினால் எப்படி ஐம்பொறிகளும் செயற்படுகின்றனவோ அப்படியே சேர்க்கும் பொருளால் உலகத்தில் செயல்கள் நடைபெறுகின்றன.

உணவு இல்லையேல் ஐம்பொறிகளும் நிலை கலங்கிப் போவது போலப் பொருள் இல்லையேல் வீடும் நாடும் அழிந்தொழியும்.

பொருளை நல்வழியில் சேர்ப்பது, செலவழிப்பது என்பதோடு நில்லாமல் ஒருவன் ஞான மார்க்கத்தில் நிலை பெற வேண்டும். ஆன்ம முன்னேற்றத்திற்கும் அயராது பாடுபட வேண்டும்.

நல்ல உணவாலும் நல்ல ஒழுக்கத்தாலும் உடலைக் காப்பாற்ற வேண்டும். எப்படிப்பட்டவனும் தன் சக்திக்கு ஏற்றவாறு எதையும் செய்ய வேண்டும். தன் சக்திக்கு ஏற்ற தவம்.

சக்திக்கு ஏற்ற தானம். சக்திக்கு ஏற்ற தியாகம் என்பதை நினைவில் கொண்டு வாழ்க்கையை நெறிப்படுத்திக் கொள்ள வேண்டும்" எனக் கூறி முடித்தார் ஈஸ்வரன்.

பார்வதி- எல்லோரையும் படைக்கும் கடவுளான பிரமதேவர் சமமாக படைத்தார் என்றால், சிலர் ஏன் இன்பத்தை அனுபவிக்கிறார்கள்? சிலர் ஏன் துன்பத்தில் வாடுகின்றனர்?

ஈஸ்வரன்-முற்காலத்தில் பிரமதேவர் மனிதர்களைச்சமமாகவே படைத்தார். அவருக்கு யாரிடத்திலும் வெறுப்பும் இல்லை. விருப்பும் இல்லை. பிறக்கும் போது யாவரும் வேற்றுமையின்றியே பிறந்தனர்.

அந்த யுகத்தில் அவர்கள் சமமாகவே இருந்தனர். காலம் செல்லச்செல்ல, செயல் காரணமாக வேறுபட்டனர்.

அதனால் மக்களிடையே பூசல் உண்டாயிற்று. இதனை உணர்ந்த அறவோர் பிரமதேவனிடம்சென்று முறையிட்டனர்.

"உமக்கு ஏன் இந்த மனோ பாவம்! நாங்கள் அனைவரும் உம் புத்திரர் அல்லவா? அப்படியிருக்க ஏன் பூசல் தோன்றியது". என வினவினார்.

அதற்கு பிரமதேவர்,"நீங்கள் என் மீது குற்றம் கூறுவதில் அர்த்தம் இல்லை. நீங்கள் உங்கள் செயல்களை நினைத்துப் பாருங்கள்". (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் பொருளைக் கொள்ளையிட்டோன் பாம்பாகப் பிறந்து, மானிடர்க்கும் பயப்பட்டுக் காட்டில் கிடந்து தேம்பித் திரிவான்.

– வாரியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தெய்வ விக்கிரகங்கள் காணாமல்போகின்ற கொடுமை

சைவாலயங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள தெய்வ விக்கிரகங்கள் காணாமல் போகின்ற கொடுஞ்செயல் தொடர்ந்த வண்ணமுள்ளன.

இவ்வாறு காணாமல்போகின்ற விக்கிரகங்கள் திருட்டுப் போகின்றனவா? அல்லது வேண்டுமென்றே காணாமல் ஆக்கப்படுகின்றனவா? என்பதுதான் புரியாமல் உள்ளது.

பொதுவில் சைவாலயங்களில் ஐம்பொன்னாலான எழுந்தருளி விக்கிரகங்கள் இருப்பது எல்லோரும் அறிந்த விடயம்.

தவிர குத்துவிளக்குகள், தாம்பாளங்கள் என ஏகப்பட்ட ஆலயப்பொருட்கள் பித்தளை கொண்டு செய்யப்பட்டவை.

இதற்கு மேலாக, தெய்வ விக்கிரகங்கள் மற்றும் குத்துவிளக்கு உள்ளிட்ட பித்தளை பொருட்கள், மரத்தால் செய்யப்பட்ட வாகனங்கள் என்பன மிகப் பழமைவாய்ந்த பொக்கிசங்கள். எந்தக் காலத்திலும் கிடைக்க முடியாத இந்த அரும்பொருட்கள் காணாமல் போவது ஒட்டு மொத்த சைவ மக்களையும் வேதனைப்படுத்தியுள்ளது.

இதற்கப்பால், எம் முந்தையர் விரதமிருந்து வழிபட்டு வந்த தெய்வ விக்கிரகங்கள் காணாமல்போய்விட்டன எனும்போது அதனால் ஏற்படக்கூடிய மனப்பாதிப்பு என்பது சாதாரணமானதல்ல.

காலாகாலமாக வழிபட்டு வந்த விக்கிரகங்கள் காணாமல்போய்விட்டன எனும் போது, அஃது மிகப்பெரும் இழப்பு ஏற்பட்டதான மனநிலையை ஏற்படுத்தி விடும்.

இந்த நிட்டூரத்தின் மத்தியில்; சைவாலயங்களில் உள்ள விக்கிரகங்களை சேதமாக்குகின்ற அக்கிரமச் செயல்களும் அரங்கேறிக் கொண்டே இருக்கின்றன.

இந்த இடத்தில்தான் திருட்டு என்ற பெயரோடு தெய்வ விக்கிரகங்களைக் காணாமல் ஆக்குகின்ற மதவாதச் செயல் நடந்தாகின்றதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

எதுஎவ்வாறாயினும் எங்கள் தமிழர் தாயகத்தில் இருந்த எங்கள் பழந்தமிழ்ப் பண்பாட்டின் அடையாளங்கள், எம் வாழ்வியலின் பயன்பாட்டு உபகரணங்கள் என அனைத்தும் எம் அறியாமையால், எங்களைவிட்டுப் போய் விட்டன.

இனி அவற்றைக் காண்பது முடியாத காரியம் என்ற வேதனை எந்தக் காலத்திலும் தீரப் போவதில்லை.

நிலைமை இதுவாக இருக்கையில், சைவாலயங்களில் பழமையும் வழிபாட்டுப் பெருமையும் கொண்ட தெய்வவிக்கிரகங்கள் காணாமல்போவது அல்லது திருட்டுப்போவது உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

இதனைச் செய்யாதபோது அதனால் ஏற்படக்கூடிய தெய்வ நிந்தை சம்பந்தப்பட்டவர்களை நிச்சயம் சூழ்ந்து கொள்ளும்.

# அலி சப்ரியின் நீதியமைச்சு பதவியை பறிக்க வேண்டும்

## கலகொட அத்தே ஞானசாரதேரர்

(கொழும்பு)

நீதி அமைச்சர் பதவியில் இருந்து அலி சப்ரி நீக்கப்பட வேண்டும், அவர் நீதி அமைச்சர் பதவியில் இருக்கும் வரையில் சஹ்ரான் செய்த குற்றங்களுக்கு நியாயத்தை பெற்றுக் கொள்ள முடியாது என பொதுபலசேனா அமைப்பின் செயலாளரும் "ஒரே நாடு ஒரே சட்டம்" ஜனாதிபதி செயலணியின் தலைவருமான கலகொட அத்தே ஞானசாரதேரர் தெரிவித்தார்.

"ஒரே நாடு ஒரே சட்டம்" ஜனாதிபதி செயலணியின் தலைமைத்துவம் குறித்து பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளதுடன், நீதி அமைச்சர் உள்ளிட்ட ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ள நிலையில் அதற்கு பதில் தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார்.

"ஒரே நாடு ஒரே சட்டம்" ஜனாதிபதி செயலணி உருவாக்கத்தின் போதும் அதில் என்னை தலைவராக நியமித்துள்ளதற்கும் பல்வேறு விமர்சனங்கள், அவதூறு கருத்துக்கள் எழுவதை அவதானித்தே வருகின்றேன். ஆனால் இவற்றை நாம் கருத்தில் கொள்ளப் போவதில்லை என்றும் அவர் கூறினார்.(ம)

## எந்த தூதுவர் உதவினாலும் நாம் தடுக்க மாட்டோம்

### அங்கஜன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எமது மக்களுக்கு எந்த தூதுவர் உதவி செய்ய முன்வந்தாலும் அதனை நாம் தடுக்க மாட்டோம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் கடந்த காலத்தில் அநேக மானவற்றை இழந்துள்ளது. அவற்றை மீளப்பெற்று நாம் அபிவிருத்தியடைய வேண்டும். இதற்கு இலங்கை அரசின் நிதி போதாது. ஆகவே, எந்த நாடு எமக்கு உதவி புரிய வந்தாலும் நாம் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அதற்காக நாம் இந்தியாவை வெறுப்பது என்று இல்லை. போரின் பின்னர் அன்றும் இன்றும் எமக்கு அவர்கள் நிறைய உதவிகள் செய்கின்றார்கள். அதனை நாம் மறக்க மாட்டோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(ம-18.33)

## மாற்றங்களுக்கு உள்ளான புதிய 'லிட்ரோ' எரிவாயு சந்தைக்கு விநியோகம்

(கொழும்பு)

புதிய செறிமானம் காட்சிப்படுத்தப்பட்ட சமையல் எரிவாயு கொள்கலன்களை சந்தைக்கு விநியோகித்துள்ளதாக லிட்ரோ காஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, தர நிர்ணய நிறுவனத்தின் பரிந்துரைக்கு அமைய 30 சதவீத ப்ரோப்பேன் செறிமானம் அடங்கிய சமையல்எரிவாயு கொள்கலன்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

உரிய செறிமானம் அடங்கிய சமையல் எரிவாயு கொள்கலன்களை சந்தைக்கு விநியோகிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் லிட்ரோ காஸ் நிறுவனத்திற்கு உத்தரவிட்டிருந்தது.

இதன்படி, உரிய தரத்துடனான சமையல் எரிவாயு கொள்கலன்களை விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அந் நிறுவனம் தெரிவித்துள்ளது.(ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், ஆசிக்குளம் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

## 'லாப்ஸ்' எரிவாயு விநியோகம் ஆரம்பம்

இலங்கை தர நிர்ணய நிறுவனம் மற்றும் நுகர்வோர் விவகார அதிகார சபையின் பரிந்துரைகளுக்கு அமைய நள்ளிரவு முதல் உள்நாட்டு எரிவாயு விநியோகத்தை ஆரம்பிக்கவுள்ளதாக லாப்ஸ் எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

உரிய தரத்துடனான சமையல் எரிவாயு கொள்கலன்களே சந்தைக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக லாப்ஸ் எரிவாயு நிறுவனத்தின் தலைவர் கே.எச். வேகபிட்டிய தெரிவித்துள்ளார். (ம)

# சத்திய தரிசனம்



## ஆத்மாவிற்கு உரமிடுங்கள்

- பாரதப் பண்பாடு அனுபவத்தாலும், வெளியுலகம் அறிவதாலும் மேலும் மேலும் சிறப்படைந்து வருகிறது. அனுபவம் மேலிட மேலிட நம் பண்பாடு பற்றி அதிகம் அறிகிறோம். புதிய எண்ணங்கள் நமக்கு எழுகின்றன.
- உன் காலில் தைத்துள்ள முள்ளை இன்னொரு முள்ளால்தான் எடுக்க வேண்டும். பாதத்தில் தைத்த முள்ளை எடுக்க கோடாரியைப் பயன்படுத்த முடியாது. வைரத்தை வைரத்தால்தான் அறுக்க முடியும். ஒரு மனிதனைப் புரிந்து கொள்ள மிக முக்கியமான மனித இயல்புகளால்தான் முடியும்.
- பல மரங்களைப் பார்த்திருக்கலாம். சில பெரிய ஆலமரங்கள் பெரிய மாளிகை போலப் பெரியதாய் காட்சி அளிக்கின்றன. அதன் விதையைப் பார்த்தால் கடுகு போல மிகச் சிறியதாயுள்ளது. அந்த மிகச்சிறிய விதையுள் தான் அந்த மிகப்பெரிய ஆலமரம் உள்ளது என்பதுதான் உண்மை. இதே போலப் பிரபஞ்சமெனும் பெரிய மரத்தில் காண்பன யாவும், தெய்வீகமெனும் சிறிய விதையிலிருந்து தோன்றியதுதான். இவ்வண்ணமே உன் பெரிய உடலில் ஆத்மாவின் அம்சமாக மிகமிகச் சின்னஞ்சிறிய விதையுள்ளது. அதற்கு உரமிட்டு, வளர்த்து செழிக்கவிடு. அப்போதுதான் பிரபஞ்சத்தின் தெய்வ ஸ்வரூபம் தெரியும்.
- ஒரு மனிதனின் வாழ்வில் நடக்க வேண்டியவை நடந்தே தீரும். தவிர்க்க முடியாத சம்பவங்களை எடுத்துக் [illegible] பயன்படுத்துவது தவறு. அது நல்ல மனித இயல்பு அல்ல. அனுபவிக்க [illegible] நமக்குள்ள தொந்தரவுகள் யாவும் வெளியிலிருந்து வந்தவையோ, கடவுள் கொடுத்தவையோ அல்ல. அவை யாவும் நம் செயலின் விளைவுகளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I

38

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



1918 ஆம் ஆண்டு எஞ்சிய சிதைவுகளைப் பாதுகாத்து சீரமைக்கும் பணியை அப்போது யாவாவை ஆண்ட டச்சு அரசு ஆரம்பித்தது. 1953 இல் பிரதான ஆலயமான சிவன் கோயில் முற்றாக மீளமைக்கப்பட்டு, சுகர்ணோவால் திறந்து வைக்கப்பட்டது.

47 மீ. (154 அடி) உயரமான இக்கோயிலின் மைய விமானம், தென் கிழக்காசியாவின் மிகப்பெரிய இந்துக் கோயில்களில் ஒன்றாக இருப்பதுடன், ஆண்டாண்டாய், பல்லாயிரம் உல்லாசப்பயணிகளைக் கவரும் இடமாகவும் இது திகழ்ந்து வருகிறது.

முதலில் சிவனுக்காகவே கட்டப்பட்ட இவ்வாலயம் ஆரம்பத்தில் "சிவக்கிரகம்" என்றே அழைக்கப்பட்டிருக்கிறது என்பதை இக்கோயிலிலுள்ள கி.பி. 856 ஆம் ஆண்டு "சிவக்கிரகக் கல்வெட்டு" கூறுகிறது.

பிற்காலத்தில், இதன் இருபுறமும் திருமால், பிரமன் ஆகியோருக்கு ஆலயம் எழுப்பப்பட்டு தற்போது வரை மும்மூர்த்திகள் கோயிலாகவே இனங்காணப்பட்டு வருகிறது.

இந்தோனேசியாவின் மிக முக்கியமான சுற்றுலாக் கவர்ச்சி இடங்களில் ஒன்றாக, பிரம்பானான் திகழ்கிறது. யாவா மற்றும் பாலி இந்துக்கள் தம் சமயச் சடங்குகளைப் பிரம்பானான் பகுதியில் தொடர்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

பிரம்பானான் ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள திரிமூர்த்தி திறந்தவெளி அரங்கில், ஒவ்வொரு பூரணையிலும் இடம்பெறும், யாவாவின் பாரம்பரிய இராமாயண நடனம் இன்றும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் அரங்காடலாகத் திகழ்கிறது.

2006 இல் யோக்யகர்த்தாவில் ஏற்பட்ட பூகம்பத்தால் பலத்த சேதமடைந்துள்ளதால், ஆலயத்தின் சில பாகங்களுக்குள் நுழைய, வருகையாளர்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

13 பெப்ரவரி 2014 இல் குமுறிய கெலுட் எரிமலைச் சாம்பல் பாதிப்பால் இக்கோயில் வளாகம் மூடப்பட்டதெனினும் சில நாட்களிலேயே மீளத் திறக்கப்பட்டது.

பிரம்பானான் கோயிலும் அதன் சூழலும்



| உரு 35 | இந்திய எண்கள் (இந்திய மொழிகளின் எண்கள்) | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இந்து-அரபு எண்கள் | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | மாநிலம் |
| தேவநாகரி | ० | १ | २ | ३ | ४ | ५ | ६ | ७ | ८ | ९ | |
| தமிழ் எண்கள் | ▯ | ௧ | ௨ | ௩ | ௪ | ௫ | ௬ | ௭ | ௮ | ௯ | தமிழ் |
| பெங்காலி(வங்காள) எண்கள் | ০ | ১ | ২ | ৩ | ৪ | ৫ | ৬ | ৭ | ৮ | ৯ | வங்காளம், அசாமியம் |
| குஜராத்திய எண்கள் | ૦ | ૧ | ૨ | ૩ | ૪ | ૫ | ૬ | ૭ | ૮ | ૯ | குஜராத்தியம் |
| குர்முக்கி எண்கள் | ੦ | ੧ | ੨ | ੩ | ੪ | ੫ | ੬ | ੭ | ੮ | ੯ | பஞ்சாபி |
| மலையாள எண்கள் | ൦ | ൧ | ൨ | ൩ | ൪ | ൫ | ൬ | ൭ | ൮ | ൯ | மலையாளம் |
| ஒடியா எண்கள் | ୦ | ୧ | ୨ | ୩ | ୪ | ୫ | ୬ | ୭ | ୮ | ୯ | ஒடிசா |
| தெலுங்கு எண்கள் | ౦ | ౧ | ౨ | ౩ | ౪ | ౫ | ౬ | ౭ | ౮ | ౯ | தெலுங்கு |
| கன்னட எண்கள் | ೦ | ೧ | ೨ | ೩ | ೪ | ೫ | ೬ | ೭ | ೮ | ೯ | கன்னடம் |

**உரு 35A சில திராவிட மொழிகளில் எண்களின் உச்சரிப்பு**

| எண் | தமிழ் | கன்னடம் | மலையாளம் | தெலுங்கு |
|---|---|---|---|---|
| 1 | ஒன்று | ஒந்து | ஒண்ணு | ஒகட்டி |
| 2 | இரண்டு | எரடு | ரண்டு | ரெண்டு |
| 3 | மூன்று | மூரு | மூந்து | மூடு |
| 4 | நான்கு | நாலக்கு | நாலு | நாலுகு |
| 5 | ஐந்து | ஐது | அஞ்சு | ஐது |
| 6 | ஆறு | ஆறு | ஆறு | ஆறு |
| 7 | ஏழு | ஏளு . | ஏளுகு (ஏடு) | ஏடு |
| 8 | எட்டு | எண்டு | எட்டு | எணிமிதி |
| 9 | ஒன்பது | ஒம்பத்து | ஒன்பது | தொம்மிதி |
| 10 | பத்து | ஹத்து | பத்து | பதி |

### இந்தியாவில் எண் முறைமை

இந்தியாவில் இருந்த எண் முறைமைகளான தேவநாகரி (Devanagari), குஜராத்தி (Gujarati), குர்முகி (Gurmukhi), பெங்காலி (Bengali), ஒடிசா (Odia), தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிவை (உரு 35) இந்து-அரபு எண் முறைமையின் கீழ் அடங்குகின்றன. அவைபற்றி இப்போது பார்ப்போம்.

தேவநாகரி (Devanagari) என்பது சமஸ்கிருதம், ஹிந்தி, மராட்டி, காஷ்மீரி, சிந்தி போன்ற இந்திய மொழிகளையும், நேபாளியை யும் எழுதப் பயன்படுத்தும் ஒரு எழுத்து முறைமையாகும். தேவநாகரி அபுகிடா என்று அழைக்கப்படும் எழுத்து முறைமை வகையைச் சேர்ந்தது.

தேவநாகரி எழுத்து முறையை ஏற்றுக் கொண்ட இந்தி, மராத்தி, கொங்கணி, நேபாளி, வடமொழி ஆகிய மொழிகள் தேவநாகரி எண்களைப் பயன்படுத்தினாலும் ஒவ்வொரு மொழியிலும் எண்களின் பெயர்கள் வேறுபடுகின்றன.

உரு 35 இல் ஏனைய இந்திய மொழிகளின் எண்கள் காட்டப்பட்டுள்ளன. பெங்காலி (வங்காள) எண்கள் பயன்படுத்தும் மொழிகள் வங்காளம், அசாமியம் ஆகும்.

குஜராத்திய எண்கள் பயன்படுத்தும் மொழி குஜராத்திய மொழி ஆகும். குர்முக்கி எண்கள் பயன்படுத்தும் மொழி பஞ்சாபி மொழி ஆகும். மலையாள எண்கள் பயன்படுத்தும் மொழி மலையாளம் ஆகும்.

ஒடியா (ஒடிசா) எண்கள் பயன்படுத்தும் மொழி ஒடியா மொழி ஆகும். அதாவது எண்கள் தத்தமது மொழிகளை மருவியே உருவாக்கப்பட்டுள்ளன. சில திராவிட மொழிகளில் எண்களின் உச்சரிப்பை உரு 35 A இல் காட்டப்பட்டுள்ளது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணுவிலில்...

காரணமாக மூன்றரை மாதக் குழந்தை ஒன்று இணுவிலில் உயிரிழந்துள்ளது.

இதில் இணுவில் தெற்கைச் சேர்ந்த குணசீலன் யுகன் என்ற மூன்றரை மாத குழந்தையே உயிரிழந்துள்ளது.

நேற்று அதிகாலை 3.30 மணிக்கு தாய்ப்பால் குடித்த குழந்தை காலை 6 மணியளவில் திடீரென மூச்சடங்கிக் காணப்பட்டது.

உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும் குழந்தை உயிரிழந்ததாக மருத்துவ அறிக்கையிடப்பட்டது.

மரண விசாரணையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் முன்னெடுத்தார். (ம-18,33)

## 3 ஒமிக்ரோன்...

4 பேர் ஒமிக்ரோன் கோவிட் திரிபுடன் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

அவர்களில் ஒருவர் நாட்டை விட்டு வெளியேறியதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## பஸ் கட்டணம்...

தொடர்பான கணிப்பீடுகளை மேற்கொள்ளுமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

பஸ் கட்டணம் அதிகரிப்பு தொடர்பிலான முரண்பாடற்ற வகையிலான இறுதித் தீர்மானம் எதிர்வரும் வாரம் அறிவிக்கப்படும் என போக்குவரத்து துறை இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

எரிபொருட்களின் விலை சடுதியாக அதிகரிக்கப்பட்டதை தொடர்ந்து இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர் பஸ் கட்டணத்தை 20 சதவீதத்தினால் அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

பஸ் கட்டணம் அதிகரிப்பு தொடர்பில் போக்குவரத்து இராஜாங்க அமைச்சருக்கும் தனியார் பஸ் சங்க உரிமையாளர்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை நேற்று போக்குவரத்து அமைச்சில் இடம்பெற்றது.

இதன்போதே மேற்கண்ட விடயங்கள் தீர்மானிக்கப்பட்டன. (ம)

## வடக்கு - தமிழக...

தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பில், எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 68 தமிழக மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் அரிந்தம் பக்ஜி தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இருதரப்பு மீனவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கேற்க உள்ள தமிழக மற்றும் இலங்கை மீனவர் சங்க பிரதிநிதிகளின் பெயர்ப் பட்டியலை இந்திய வெளிவிவகார அமைச்சு கோரியுள்ளதாக அந்த நாட்டு ஊடகமொன்று தெரிவித்துள்ளது. (ம)

## வவுனியா...

திற்கு முன்பாக அமைந்துள்ள வர்த்தக நிலையத்தின் வாயில் பகுதியில் முதியவர் ஒருவரின் சடலம் நேற்று இரவு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வயோதிபர் உடல்நலக் குறைவினால் மரணம் அடைந்தாரா? அல்லது யாரேனும் தாக்குதல் மேற்கொண்டு இறந்தாரா? என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, குறித்த முதியவர் பழைய பேருந்து நிலையத்தில் தினசரி நடமாடி திரிபவர் என பொதுமக்கள் தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-250,299)

## அரசின் நத்தார்...

வீழ்ச்சியடைந்துள்ளபோதிலும் தற்போதைய அரசாங்கத்தின் செயற்திறனற்ற பொருளாதார நிர்வாகத்தின் விளைவாக எமது நாட்டில் எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் மக்கள்மீது அதிக சுமையை சுமத்தி, தமது இயலாமையை மறைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கக்கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

நாடும் நாட்டுமக்களும் முகங்கொடுத்திருக்கக்கூடிய பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கின்ற பொறுப்பு ஆட்சிபீடத்திலுள்ள அரசாங்கத்தின்வசம் காணப்படுவதுடன் அதற்கேற்றவாறுதான் கடந்தகால அரசாங்கங்களும் செயற்பட்டு வந்திருக்கின்றன.

இருப்பினும் எதிர்த்தரப்பினரான எம்மைப் பொறுத்தமட்டில், அதிகாரம் எம்வசமில்லாதபோதிலும் கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடி ஏற்பட்ட நாளிலிருந்து தற்போதுவரை அதனைக் கையாள்வதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் அவசியமான உதவிகளை இயலுமானவரையில் வழங்கி வருகின்றோம் என்றார். (ம)

## அழகுபடுத்தும்...

நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் முன்னெடுக்கப்படும் இந்த செயற்றிட்டங்களுக்கான முன்மொழிவுகளை, பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன் முன்வைத்திருந்தார்.

64 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் வல்லைவெளிப்பகுதியில் வரவேற்பு வளைவு, நடைபாதை, இளைப்பாறும் பகுதிகள், வாகனத்தரிப்பிடங்கள், இயற்கை ரசனை மையங்கள், சிற்றுண்டி மையங்கள், கழிப்பறை வசதிகள், வல்லைச்சந்தி மேம்படுத்தல் என்பன இத்திட்டத்தின்கீழ் அமைக்கப்படவுள்ளது. (ம-18,33)

## விபத்துக்குள்...

மடைந்த வயோதிபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த பரஞ்சோதி சற்குணநாதன் (வயது- 80) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 18ஆம் திகதி நடந்து சென்ற இவர் மீது கூலர் ரக வாகனம் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கிருந்து கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று புதன்கிழமை பிற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

வைத்தியசாலைக்கு சென்ற பருத்தித் துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டார். (ம-60)

## பாரத...

அவர் நேற்றுப் புதன் கிழமை வெளியிட்டுள்ள விசேட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

புதிய வரைபு தயாரிக்கப்பட்டபோது அதன் நோக்கம், பொருள் என்பன மாற்றப் பட்டே புதிய ஆவணம் தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆவணமும் தற்போது ஒரு வரைபாகவே இருக்கின்றது.

இந்த வரைபை அல்லது இதன் திருத்தத்தைக் கட்சிகள் ஏற்றுக் கொண்டால் மட்டுமே இது கைச்சாத்திடப்படும்.

சில ஊடகங்கள் தொடர்ந்தும் தவறான தலைப்பில் இது சம்பந்தமான செய்திகளை வெளியிடுவதால் இந்த ஊடக அறிக்கை வெளியிடப்படுகின்றது எனவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## வடக்கின்...

அன்று அந்த கூட்டத்தில் அந்த மக்களுக்கு நான் சொன்னேன் "பாருங்கள், ஏ9 வீதி சீரமைக்கப்படுகின்றது.

பின்னர் புகையிரத சேவையில் சிரேஷ்ட நிபுணர் ஒருவர் என்னை சந்தித்து ஒரு விடயத்தை கூறினார். இங்கு நாட்டை அபிவிருத்தி செய்யும் திட்டம் இடம்பெறவில்லை மாறாக பாரிய கொள்ளை சம்பவம் ஒன்றே இடம்பெறுவதாக கூறினார்.

இந்தியாவின் இல்கோன் என்ற நிறுவனம்தான் வடக்கிற்கு இந்த புகையிரத பாதையை அமைத்தது. அவர்கள் இந்த திட்டத்தை நாம் கூறிய விலையை விட 4 மடங்கு அதிகமான விலையில்தான் செய்தது. நாம் இதை செய்திருந்தால் 4 இல் ஒரு பங்கில் செய்திருக்கலாம். ஆனால் இவர்கள் 100%க்கு 400% அதிகமாகவே கொள்ளையடிக்கிறார்கள்.

இதைக்கேட்டு நான் அதிர்ந்து போனேன். இதேபோல் ஏ9 பாதையை சீரமைக்கும் நிறுவனத்தின் பிரதான பொறியியலாளர் என்னிடம் வந்து அப்போது கூறினார் அதே நிலைதான் இந்த பாதைக்கும் என்று கூறினார். (ம)


தன நிதானய
திகதி - 2021.12.22
சீட்டிழுப்பு இலக்கம் - 654
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 41 43 59 66

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 22.12.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2919
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 12 25 38 57

மஹஜன சம்பத
திகதி 2021/12/22
சீட்டிழுப்பு இலக்கம் 4624
B 9 3 4 2 4 8

மெகா பவர்
திகதி 22/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0972
I 09 16 17 57 64

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 22/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1186
கும்பம் 0 9 1 5 1 6

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 112
சீட்டிழுப்பு திகதி 22.12.2021
புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 17 28 48
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,372,420/-

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 1427
சீட்டிழுப்பு திகதி 22.12.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,909,060
வெற்றி இலக்கங்கள் 11 17 52 67 X

சனிதா
சீட்டிழுப்பு இல: 3762
சீட்டிழுப்பு திகதி 22.12.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,064,360
வெற்றி இலக்கங்கள் 17 31 59 72 M

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1601
சீட்டிழுப்பு திகதி 22.12.2021
நிறம் செம்மஞ்சள்
தினம் புதன்
C 08 38 48 58
அடுத்த சுப்பர் ஜக்பொட் : 50,776,709/=

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,926,427/=
திகதி 22.12.2021
வெற்றி வாரம் 3313
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 33 43 52 53
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,540,840/=

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1796
சீட்டிழுப்பு திகதி 22.12.2021
வெற்றி இலக்கங்கள் 07 14 34 55 A
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 29,250,116/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



மலர்வு
28 - 06 - 1925

உதிர்வு
21 - 12 - 2021

## திரு. விஸ்வலிங்கம் வேலாயுதம்
( Rtd. MLT )

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. விஸ்வலிங்கம் வேலாயுதம் அவர்கள் நேற்று முன்தினம் (21.12.2021) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற குழந்தைவேல் - சோதிமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராஜேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் கிருஸ்ணகுமாரி (சுவிஸ்), இந்துமதி, ரதி, ஜெயந்தி, வசந்தி, சாந்தகுமாரி (நோர்வே), லலிதகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் சண்முகநாதன், சந்தியாப்பிள்ளை, லோகநாதன், காலஞ்சென்ற ஆனந்தராசா, மகேந்திரன், ஜெயமேனன், முருகேஸ்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் சுபோதினி, குகதாசன், சுதர்சினி, புஸ்பகாந்தி, சிறீகாந், தேனுகாந்தி, நீலவண்ணன், ரகுராமன், அபிராமன், தாமரைச்செல்வி, சாரூண், அகிலன், லோஜினி, செந்தூரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் மணிமாறன், மணிபரன், சுவேதா, சரண், சுசிக்கா, சுகானந், அர்வின், லவன், ரங்கனா, சஞ்ஜய், ரித்தீஸ், திவ்வியன், கிருஷன், சர்வின் ஆகியோரின் அன்பு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நேற்று முன்தினம் (21.12.2021) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் சுப்பர் மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(9200)

N.M Lane,
Point Pedro.

077 542 2451

தகவல் :-
குடும்பத்தினர்

# நாட்டில் நேற்று மேலும் 673 பேருக்கு தொற்று

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்று உறுதியான மேலும் 673 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனை தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 581,595 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 8,558 பேர் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 311 பேர் நேற்று குணமடைந்துள்ளனர். (ம)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9186)

076 825 7716 (ஆகாஸ்)

Nurse & Phelebotomist
தேவை

யாழ். நகரில் புதிதாக ஆரம்பமாகவுள்ள நிலையத்திற்கு உடனடியாக Nurse & Phelebotomist உடனடியாகத் தேவை.

விண்ணப்ப முடிவு திகதி :
27 மார்கழி

தொடர்பு (9192)

076 800 1718

Email: scandilanka@gmail.com

விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- நெல்லியடி
- புதுக்குடியிருப்பு
- பருத்தித்துறை
- புத்தூர்
- கொடிகாமம்
- சுன்னாகம்
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- மானிப்பாய்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி

(C-3286)

0768226240 DHL

உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

(C-3322)

எமது கிளைகள்

கிளிநொச்சி சுன்னாகம்
சாவகச்சேரி மானிப்பாய்
நெல்லியடி பருத்தித்துறை
திருகோணமலை வல்வெட்டித்துறை
கோப்பாய் புத்தூர்

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 20'000/-
பயிற்சியின்போது - 15'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0777-068-777
v2vacancies@gmail.com

# காணி விற்பனைக்கு




யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில்
கனக்கர் வளவு 8 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன் சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 மீற்றர் தூரம்

பார்வையிடும் நேரம் காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

[ தரகர் தேவையில்லை ]

தொடர்புகளுக்கு

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (9197)

077 814 7389, 077 614 7333

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.